முரசொலி

வார இதழ் ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு 4 ‖ 31-5-57 வெள்ளி ஒலி 6

'உனக்காக; எல்லாம் உனக்காக!'

"நேரு அரசாங்கம் நிதி இலாக்கா மூலமாக, இந்நாட்டு நடுத்தர வர்க்கத்தினர்மீதும், ஏழை பாழைகள் மீதும் விதித்துள்ள வரியைக் கண்டித்து, எதிர்ப்புப்பேரலையென உயர்ந்திருக்கிறது. நாட்டிலே உள்ள பல்வேறு கட்சிகளும்—கட்சிகளை இயக்குகின்ற நாயகர்களும்—"நாளெல்லாம் நரம்பு முறிய பாடுபட்டும் வயிறார உண்ண முடியாத நிலையில் வாழ்வோர் மீது வாழ்விழந்து, வாழ்வின் சுவையிழந்து—வேதனையின் வடிவங்களாய்—வறியோராய்—சருகிய உடல் கொண்டோராய்—உலவுகிறவர்கள்மீது உதவாது இனிப்புதிய சுமை! உடனே புதிய வரிகளை 'வாபஸ்' பெறுக" எனக் குரல் எழுப்பி இருக்கின்றனர், எதிர்க்கட்சிக் காரர்கள் 'கண்டன'க் குரலையும், ஆளும் கட்சியினர் வேண்டுகோளையும் விடுத்துள்ளனர். நாட்டில் எழுப்பப்பட்ட இக்கண்டனக் குரல் கிருஷ்ணமாச்சாரியாரின் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. விழுந்தும்—விழாததைப் போல தன் 'வேலை'யைத்துவக்கியிருக்கிறார். அவருக்கு நேரு துரைமகனார் 'வக்காலத்து' வாங்கி பதில் அளித்துள்ளார். 'ஹாரோ'க் கல்லூரியில் அவர் படித்த 'சட்டம்' இப்பொழுதாவது பயன் பட்டதே! அதுவரை மகிழ்ச்சிதான்!

காங்கிரஸ் பொதுக் காரிய தரிசி நாராயணனும், மற்ற நாட்டு மக்களின் வாழ்வில் அக்கறை கொண்ட ஒரு சில காங்கிரஸ் பார்லிமெண்ட் அங்கத்தினர்களும், டி. டி. கே.யின் பட்ஜெட்டை ஏழைகளின் வாழ்வை நசுக்கும் திட்டம்—மத்தியதர வகுப்பினர்களுக்கு வழங்கப்படும் புதை குழி—என்றெல்லாம் குரல் எழுப்பிய காரணத்தால், 'கோட்டை'க்குள்ளே கண்டனக் குரல் எழுந்தால்—தனது 'கொளு'விற்கே 'உலை' வைத்துவிடுமே என பயந்த பண்டிதர் பட்ஜெட்டை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டிருக்கிறார், பலமுறை நேரு கையாளுகின்ற 'அதிர்ச்சி வைத்தி'யத்தில் இதுவும் ஒன்று!

"நேரு கூறிவிட்டார்—இனி யாரோ பதில் கூற வல்லார்? பண்டிதர் மொழிப்படி—வழி நடப்போர் தானே காங்கிரஸ்காரர்கள்" என்ற எண்ணத்தால் டி. டி. கே. பண்டிதரை—தனது கடைசி ஆயுதத்தைப் பிரயோகிக்கச் செய்து விட்டார். இனி சீறி எழுந்த காங்கிரஸ்காரர்களும் 'மௌன விரதம்' பூண்டு விடுவார்கள்.

பட்ஜெட்டை ஆதரித்து பண்டிதர் "இந்த சுமைகளை நாம்தான் சுமக்க வேண்டும்... நமது சுதந்திரத்தை பாதுகாக்கவும், தங்கு தடையின்றி முன்னேறவும் உறுதிகொண்டிருக்கிறோம். இதற்காக எந்த சிரமங்களையும் பொருட்படுத்த மாட்டோம் என்பதை மற்ற நாடுகளுக்கு உணர்த்த விரும்புகிறோம். ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றிவைக்க இந்நாடு ஏற்கவேண்டியிருக்கும் சுமை கஷ்டமாக இருந்தாலும், முன்னேறிச் செல்ல நாம் உறுதிகொண்டிருக்கிறோம்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

❋ 10-ம் பக்கம் பார்க்க

மக்களின் மீது புதிய வரி விதிப்பது அவர்களின் நலனுக்காகத்தான்—என்கிறார் டி. டி. கே. அதை 'சங்கர்ஸ் வீக்லி' இப்படி சித்தரிக்கிறது

கற்பனை உரையாடல்

டி.டி.கே. வீட்டில்

[மே மாதம் 16-ந் தேதி: வியாழக்கிழமை: மாலை நேரம். புதுடெல்லியில் உள்ள டி. டி. கேயின் வீட்டில் அவரது மனைவி சோர்ந்த முகத்தோடு உட்கார்ந்திருக்கிறார். அப்பொழுது டி. டி. கே., ஒரு பெரிய மூட்டையைத் தலையில் தூக்கிக் கொண்டு வீட்டினுள் நுழைகிறார்...]

டி. டி. கேயின் மனைவி: என்னங்க இது? லோக்சபைக்குப் போய்விட்டு ஒரு பெரிய சாக்கு மூட்டையைத் தூக்கிக்கொண்டு வருகிறீர்? இவ்வளவும் பழைய கவர்ன்மெண்ட் ரிக்கார்டுகளா? ஐயோ! இவ்வளவையும் நீங்கள் படிக்க வேண்டுமா, என்ன?

டி. டி. கே: அடாடா! என்ன இது? வந்ததும் உன் ஒலிபரப்பை ஆரம்பித்து விட்டாயே! சத்தம் போட்டுத் தொலையாதே! யார் காதிலேயும் விழுந்துத் தொலையப் போவுது! (மெதுவான குரலில்) இது வந்து சீனி மூட்டை! இந்த வருஷத்தில் இனிமேல் 'சீனி' என்ற பேச்சையே எடுக்கக்கூடாது! சீனிக்குப் புது வரி போடப் போகிறேன்; இனி சீனி விலை ஏறிவிடும்!

மனைவி: அட பாவமே! இது சீனி மூட்டையா? அட, உங்க வீட்டிலே இடிவிழ! சீனிவாசன்னு உங்களுக்குப் பெயர் வைக்காமல் ஏன் கிருஷ்ணமாச்சாரின்னு வச்சா?

டி. டி. கே: அம்மா! தாயே! உன் வாயைக் கொஞ்சம் அடக்கிப் பேசேன்! 'மனைவி கணவன் பெயரையே கூறக் கூடாது' என்பார்கள்; நீ என்னடான்னா என் பெயரையே மாற்றி வைத்து விடுவாய் போலிருக்கிறது!

மனைவி: அது சரி! நல்லாயிருக்கு நீங்க செய்யறது? சீனிக்கூப் போய் புதுவரி போடுவாளா?

டி. டி. கே. என்ன நீயுமா?... நீ கூட இதை எதிர்க்கிறாயா? சீனி அதிகம் சேர்த்துக் கொண்டால் உடம்புக்குக் கெடுதின்னு உனக்குத் தெரியுமா? மக்களின் நலத்திற்காகவே இந்த வரி போட்டிருக்கிறேன்! தெரியுமா?

மனைவி: ஓகோ! அப்படியா? சரி! இனிமேல் சீனி போடாமல் காப்பி போட்டுத் தருகிறேன்! உங்கள் உடம்பு கெட்டுப் போய் விடப்போகிறது!

டி. டி. கே: ஐயோ! அம்மா! புண்ணியவதி! நீ சீனி போட்டு வைக்கும் காப்பியே கசக்கிறதே! தாயே! இனி சீனி வேறு போடாமல் காப்பி வைத்தால்...ஐயோ! வேண்டாம்மா! நான் நிதி மந்திரி பதவியை வேணும்னாலும் ராஜினாமா பண்ணிட்டு வந்திடறேன்! நீ சீனி போட்டு காப்பியா கொடு தாயே!

மனைவி: உங்களைப் போலத் தானே எல்லோருடைய நாக்குமிருக்கும்? அதிருக்கட்டும்; இன்னும் எத்தனை புது வரிகள் போடப் போகிறீர்கள்?

டி. டி. கே: நீ சீனிக்குக் கொடுத்த கண்டனத் தீர்மானத்திற்கு விடை கண்டு பிடித்து விட்டு மற்ற வரி விதிக்கப்பட்ட பொருள்களைக் கூறுகிறேன்!...நீ நாளைக்கு வீட்டுக்கு வரும் சாமான்களையெல்லாம் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும்!

மனைவி: இன்னும் என்ன சாமான்கள் வருகிறது?

டி. டி. கே: பேப்பர் கட்டுகள் நூறு; சிமெண்ட் மூட்டைகள்; தீப்பெட்டிக் கட்டுகள்; மண்ணெண்ணை டின்கள்...

மனைவி: அட! உங்களுக்கு யோசனையே கிடையாதா? எலெக்ட்ரிக் லைட் போட்ட வீட்டுக்கு ஏன் மண்ணெண்ணை? அதுவும் எத்தனை டின்கள் கொண்டு வரச் சொல்லியிருக்கிறீர்கள்?

டி. டி. கே: (கோபமாக) மண்ணெண்ணையை உன் தலையில் ஊற்றி நெருப்பு வைக்கத்தான்! எலெக்ட்ரிக் லைட்டுதான் அடிக்கடி நின்றுவிடுகிறதே! அப்பொழுது மண்ணெண்ணைக்கு எங்கே போறது? அதற்காகத்தான் முன்பாக பத்து டின் மண்ணெண்ணை அனுப்பச் சொல்லியிருக்கிறேன்!

மனைவி: நீங்கள் சொல்வதைப் பார்த்தால் மண்ணெண்ணைக்கும் புது வரி போட்டிருக்கேளா?... ஐயோ! ஐயோ! நீங்கள்தான் சமர்த்தா 'ஆர்டர்' செய்து விட்டேள்? என் அப்பா என்ன செய்கிறாரோ? அங்கே எலெக்ட்ரிக் லைட்டுகூடக் கிடையாது! ...இந்தப் பத்து டின்னையும் நான் ஊருக்கு அனுப்பிவிடப் போகிறேன்!...

டி. டி. கே: சரி! உன்னிஷ்டம்! பேப்பர் கட்டுகளில் மண்ணெண்ணையை ஊற்றி வீட்டுக்குத் தீ வைக்காமலாவது இருப்பாய் அல்லவா?

மனைவி: பேப்பருக்கும் வரி போட்டுவிட்டார்களா? ஐயோ! என் தம்பி, பத்திரிகையே நடத்தறானே...? ...ஊம்! உங்களுக்கு ஏதோ கெட்ட காலம்; இப்படியெல்லாம் வரி போடுகிறீர்கள்! உங்களுக்குப் பக்கம் பக்கமாக, பல கலர்களில் விளம்பரம் போட்டு உங்களை மந்திரியாக்கிய பத்திரிகைக்கே வரி போடலாமா?...

டி. டி. கே: அம்மா! உன் கண்டனங்களை இத்துடன் நிறுத்து. உன் தம்பிக்கு வேண்டுமானால் பேப்பர் வாங்கி அனுப்பி விடுவோம்! ...மேலும், நாளைக்குத் தேயிலைப் பொட்டலம் நூறு. டால்டா எண்ணை, பெட்ரோல் டின்கள், புகையிலைப் பொட்டலங்கள், சிகரெட் சுருட்டு வகையறுக்கள்... ஊம்...மறந்துவிட்டதே...... கார்டு கட்டுகள் கூடத்தான்...

மனைவி: கார்டு கட்டுகளா? என்ன கார்டு? ஏன்?

டி. டி. கே: போஸ்ட் கார்டின் விலையை 6 நயாபைசாவாக்கியிருக்கிறேன்! அதற்காகத்தான் கார்டு கட்டுகள்கூட முன்பே வாங்கிவரச் சொல்லியிருக்கிறேன். எல்லாம் உனக்குத்தான்!

மனைவி: ஐயோ! உங்கள் மூளையை சலவைக்கு அனுப்ப வேண்டியதுதான்! கார்டு கூலியை உயர்த்தினால் அதிலேகூட ஸ்டாம்பு ஒட்டித்தான் போட வேண்டும். இதுகூடவா தெரியாது?

டி. டி. கே.: (தலையைச் சொறிந்து கொண்டே) ஆமாம்; மறந்து விட்டேன்!

மனைவி: என்ன இருந்தாலும் உங்களுக்கு இவ்வளவு மறதி கூடாது! அன்றைக்கு அப்படித்தான் பேனாவைத் தொலைத்துவிட்டு வந்து நின்றீர்கள்! தொலைத்து விட்டுப் பேசாமலாவது இருக்கக் கூடாது? தத்துப்பித்துன்னு உளறியிருக்கிறேளே!

டி. டி. கே: நான் ஒன்றும் அப்படி உளறவில்லையே! நீ கூறியது போல் "டிப்டாப்"பாகத்தான் சென்றேன்! அதனால்தான் என் பேனாவை எவனோ அபேஸ் பண்ணி விட்டான்!

மனைவி: உளறவில்லையா? அடுத்த வீட்டு அம்மாமி என்னை எவ்வளவு கிண்டல் செய்றா தெரியுமோ? "நான் இந்தப் பேனாவையே தொலைத்து விட்டேனே! நிதி மந்திரிப் பதவியை எப்படிக் காப்பாற்றப் போகிறேனோ?" என்று கன்னா பின்னான்னு உளறலாமா?

டி. டி. கே: அதுக்குத்தான் நீயும் என் கூடவே வாயேன்னு சொன்னேன்! நீதான் பழைய கர்நாடகமாயிருக்கே! நேருவுக்கு வலது கை மாதிரி அவர் மகள் இந்திரா செல்லவில்லையா? நீ வந்தால் எனக்கு எவ்வளவோ உதவியாயிருக்கும்!

மனைவி: போங்க; உங்களுக்கு எப்பொழுதும் பரிகாசம் தான்! அதிருக்கட்டும்; நீங்க இந்த மாதிரி கண்டபடி வரி போட்டது சுத்தப் பிசகுன்னா?

டி. டி. கே: வரி போட்டது பிசகுதான்! ஆனால் நானாகவா போட்டேன்? இந்த முதன் மந்திரி நேரு இருக்கிறாரே, அவர் பொல்லாதவர்! தென்னாட்டுக்கே மந்திரி பதவி கொடுக்கக்கூடாதாம்; ஒற்றைக் காலில் நின்றார். நான் தேர்தலில் ஜெயித்தவுடன் தலை தப்பிப்போய், நேருவின் காலில் விழுந்த போது, அவர் அந்த ஒற்றைக் காலையும் தூக்கி மேஜைமீது வைத்துக் கொண்டார்! எப்படியோ கெஞ்சியடித்து மந்திரியானேன்! இப்பொழுது புது வரிகளைப் போடச் சொல்லி, என்னை அடுத்தத் தேர்தலில் கவிழ்க்கச் சதி செய்கிறார்! நான் என்ன செய்யட்டும்?

மனைவி: எனக்கு நீங்க நொண்டிச் சாக்கு சொல்ல வேண்டாம்! ஜனங்களெல்லாம் விழிப்பா இருக்கிறார்கள். "டி. டி. கேயும், தமிழ்நாட்டு மந்திரி சுப்ரமணியம் அவர்களும் அடுத்தத் தேர்தலில் நிச்சயம் கவிழ்ந்தார்கள்!" என்று பலர் பேசிக் கொள்கிறார்கள். உங்களைப் போலவே மந்திரி சுப்ரமணியமும் ஏதோ 'தமிழ் நாடு

✻ 8-ம் பக்கம் பார்க்க

சேலம் தொகுதி தேர்தல் வழக்கு
நிதிக் கூட்டம்

2-6-57 காலை 9 மணிக்கு
சென்னை கோகலே மன்றத்தில்

தலைவர்:
தோழர் எஸ். நாராயணன், எம்.ஏ.,

பேச்சாளர்கள்:
நாவலர்
இரா. நெடுஞ்செழியன்
மு. கருணாநிதி

நன்கொடை:
ரூ. 1; அணா 8.

—தி. மு. க. மாணவர் கிளை.

வெள்ளி 31—5—57 சென்னை

'தேசியத்தார்' பார்வைக்கு...!

வடநாட்டு ஆட்சிபீடம், தென்னாடு நலம் பெற—இன்ப திராவிடம் தழைக்க—மக்கள் வாழ்வு வளம்பெற—போதிய நாட்டம் செலுத்துவதில்லை என்பதை பலமுறை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். டில்லி துரைத்தனத்தார் தங்களது பலம்வாய்ந்த பாதத்தால், பதைக்கப் பதைக்க தமிழக மக்களை அழுத்தி, தமிழர்கள் உடலிலிருந்து பீறிடுகின்ற இரத்தத்தால் இன்ப மாளிகைகள் பலவற்றை வடநாட்டில் எழுப்புகிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறோம். நம்முடைய வாதத்திற்கு ஆதாரமாக மேலும் பல செய்திகள் 'மலை'யென குவிந்து கொண்டேயிருக்கின்றன, நாள் தோறும்!

தொழில் வளம் குறைந்துள்ள தென்னகத்தில், செயற்கை இரப்பர் உற்பத்தி சாலையை நிறுவ வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை பலரும் வேண்டிக் கொண்டார்கள். ஆனால்— நேரு அரசாங்கம், வழக்கம்போல இத்தொழிற்சாலையை தென்னகத்தில் நிறுவ அனுமதி அளிக்க மறுத்துவிட்டு உத்திரப் பிரதேசத்தில் இத்தொழிற்சாலையை நிறுவுவதென முடிவு செய்திருக்கிறார்களாம். தென்னாட்டு இயற்கை உற்பத்தி சங்கத்தவர் பலத்த கண்டனம் தெரிவித்திருக்கும் அதை பொருட்படுத்தாமல் அமைக்கப்போகிறார்கள் அத்தொழிற்சாலையை உத்திரப் பிரதேசத்தில்! அதுமாத்திரமல்ல; அதே மாநிலத்தில் ஒரு அலுமினியத் தொழிற்சாலையையும் நிறுவப்போகிறார்களாம். இவ்விரு தொழிற்சாலைக்கும் ரூ 40 கோடி செலவிடப்படுமாம்! மத்திய அரசாங்கம், வடநாடு வளம்பெற எடுத்துக் கொள்ளுகின்ற அக்கரையில், சிறிதளவுகூட தென்னாடு தழைக்க முயற்சிப்பதில்லை என்பதற்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும்? "வடநாடு வளருகிறது—தென்னாடு தேய்கிறது" என்று நாம் கூறும்போதெல்லாம், கேலி பேசுவோர் இதற்கு என்ன பதில் கூறப்போகிறார்கள்?

சேலத்தில் கிடைக்கும் 'மாக்னசேட்'டைத் தோண்டும் தொழில் ஒன்றைத் துவங்க தனக்கோ, அல்லது தனது மாநிலத்தில் உள்ள தனிப்பட்ட கம்பெனி ஒன்றுக்கோ அனுமதி தரவேண்டும் என்று சென்னை மாநில சர்க்கார், மத்திய அரசாங்கத்திற்கு ஒரு கோரிக்கையை விடுத்தது. ஆனால் மத்திய அரசாங்கம் அனுமதிதர மறுத்ததோடல்லாமல் கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனிக்கு அத்தொழிற்சாலையை குத்தகைக்கு விட வேண்டுமென, சென்னை அரசாங்கத்தை இந்தியப் பேரரசு கோரியுள்ளது, குதிரை கீழே தள்ளி குழியும் பறித்த கதைபோல!

1898-ம் ஆண்டிலிருந்து 1958-ம் ஆண்டு வரை, சேலத்தில் மாக்னசேட் தாதுப்பொருளை பிரிட்டிஷ் மூலதனத்தில் இயங்குகின்ற 'மாக்னசேட் சிண்டிகேட்' வெட்டி எடுத்து விற்க உரிமைபெற்றிருக்கிறது. அந்தக் குத்தகையின் 'கெடு' காலாவதி ஆவதால், அதை எடுத்து நடத்த, தனக்கோ, அல்லது தமிழக முதலாளிகளுக்கோ உரிமை வழங்க வேண்டுமென்ற சென்னை அரசாங்கத்தின் வேண்டுகோளை நிராகரித்து, கல்கத்தா கம்பெனிக்கு வழங்கப் போகிறது வடநாட்டு ஏகாதிபத்தியம், தட்டிக் கேட்க ஆட்கள் இல்லை—குட்டக் குட்ட குனிந்துக் கொடுப்போர் தமிழர்கள் என்ற தைரியத்தில்! இதற்கு மத்திய அரசாங்கம் காட்டும் காரணங்கள் மிக விசித்திரமாகவும், வேடிக்கையாகவும் இருக்கிறது.

தேசிய நலன் கருதி, வடநாட்டுக் கம்பெனிக்கு இத்தொழிற்சாலையை விட்டுவிட வேண்டுமென்றும், மாக்னசேட்டை வெட்டி எடுத்துத் தொழில்படுத்துவதற்குத் தேவையான இரண்டுகோடி ரூபாய் மூலதனமிட சென்னை அரசாங்கத்தால் இயலாதென்றும், அம்மூலதனம் இடக்கூடிய பணபலமுடையோர் தென்னகத்தில் இல்லை என்றும், அத்தொழிலுக்குத் தேவையான தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் கிடையாது என்பவைகளே அக் காரணங்கள்.

தேசிய நலம் கருதி—என்று மிரட்டுகிறது மத்திய சர்க்கார். தேசிய நலமென்பது வடதேசம் 'தேஜஸ்' பெறத்தானா? தேவையான மூலதனம் இட தென்னாட்டில் டாடா, பிர்லா, பஜாஜ், டால்மியா, லால்சந்த், ஹீராசந்த்—போன்ற முதலாளிகள் இல்லை என்றும், சென்னை அரசாங்கமும் இரண்டு கோடி ரூபாய் முதலீடு செய்ய அருகதை இல்லை என்றும் கூறுகிறது டில்லி துரைத்தனம். தொழில் வளம் பெருகி வருகின்ற வடநாட்டில், இன்னும் பல தொழிற்சாலைகள் நிறுவ உதவுகின்ற மத்திய அரசாங்கம் இத்தொழில் சாலையை நிறுவ சென்னை அரசாங்கத்திற்கு ஏன் பொருளுதவி செய்யக் கூடாது? ஏன் தொழில் வல்லுனர்களை அனுப்பக்கூடாது? உத்திரப் பிரதேசத்தில் 40 கோடி ரூபாய் செலவில் இரண்டு தொழிற்சாலைகளை நிறுவத் திட்டமிட்டிருக்கும் வடநாட்டு ஆட்சி பீடம் ஏன் இரண்டு கோடி ரூபாயை சென்னை அரசாங்கத்திற்கு அளிக்கக் கூடாது?

ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்? என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையா? தேசியம் பேசும் தோழர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

மத்திய அரசாங்கத்தின் ஓரவஞ்சனையை நாம் எடுத்துக்காட்டும் போதெல்லாம் ஏசும் மதி மந்திரிகள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள். சென்னை அரசாங்கத்தின் நியாயமான கோரிக்கையை நிராகரித்து விட்டது தனது 'பலத் தால் நேரு துரைத்தனம். அதை எதிர்க்க 'காமராஜர்' ஆட்சிக்கு தைரியம் உண்டா? உதைக்கும் கால்களுக்கு முத்தம் இடத்தான் போகிறதா? வடநாட்டு ஆட்சி பீடத்தின் 'ஏஜண்ட்' தானே சென்னை அரசாங்கம்—மத்திய பேரரசை தட்டிக்கேட்க உரிமை ஏது—நெஞ்சில் உரம் ஏது?

ஏற்காட்டில் சமீபத்தில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி, சேலத்தில் ஒரு இரும்பு உருக்கு தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்று தீர்மானம் போடுகிறது. ஆனால் இருக்கின்ற தொழிற்சாலையை எடுத்து நடத்த அனுமதி அளிக்க மறுக்கிறது மத்திய பீடம்.

பப்பல அணைக்கட்டுகள்—பலப் பல நீர்த் தேக்கங்கள்-பெரிய பெரிய தொழிற்சாலைகள்—இத்தனையும் வடநாட்டில்! ஆனால் தென்னகத்தில் தொழிற்சாலை நிறுவ அனுமதி அளிப்பதில்லை. ஏன் இந்த ஓர வஞ்சனை என்று நெஞ்சு உரம்பெற நாம் கேட்டால், 'நெய்வேலி'யைக் காட்டுவார்கள். ஆனால் தமிழகம் தழைக்க ஒரு நெய்வேலி போதுமா? தொழிற்சாலைகள் நிறுவ தேவையான அத்தனை கனிப் பொருள்களும் கன்னித் தமிழகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. ஆனால் அவை நமக்கு நன்மை பயக்க முடியாமல் வீணாகின்றன; அதற்குக் காரணம் நம்முடைய 'பிடி' டில்லியின் இரும்புக் கரத்தில் சிக்கியிருப்பதுதான். கொஞ்சிக் கொஞ்சிப் பேசி, முத்தம் பல ஈந்தாலும், மாற்றாந்தாயிடத்தில் பெற்றெடுத்த மாதாவுக்குள்ள பாசம்-பரிவு-அக்கரை இருக்குமா? அதுபோலவேதான் — இனத்தால்—மொழியால்—கலாச்சாரத்தால்—பழக்க வழக்கத்தால் முற்றிலும் மாறுபட்டுள்ள துரைத்தனத்தின் 'பாவாடை நாடா' வில் கட்டப்பட்டுள்ள நாம் சலுகை பெற இயலாது! ஆகவேதான் அந்த இரும்புப் பிடியிலிருந்து நாம் விடுபட வேண்டும்—அப்போதுதான் நம் தாயகம் தழைக்கும்—நலிவு தீரும்—வலிவு பெருகும் தமிழகத்தில்! தமிழ் மாதாவின் காலில் பூட்டப்பட்டுள்ள விலங்கு உடையும் நாளே—தமிழகம் உயரும் நாள்! அன்னை விலங்கொடிந்தால் இன்ப திராவிடத்தை அமைப்போம்—சமதர்மத்தை சமைப்போம்! அந்நாள் வெகு தூரத்தில் இல்லை!

விரைவில் எதிர்பாருங்கள்!

சுருளிமலை

மு. க. வின்

புதிய தொடர்கதை !

ஊராட்சி மன்றம் உணர்த்தும் குறைபாடு!

குறிப்பு

இது கட்டுரையல்ல! தோழர் மு. கருணாநிதிக்கு 24-5-57-ல் முசிறி வட்ட மேட்டுப்பாளையம் ஊராட்சி மன்றத்தினர் ஒரு சிறந்த வரவேற்பு அளித்தனர். அந்த வரவேற்பு மடலில் கண்டுள்ள குறைபாடுகள்; அனைவருக்கும்—அரசியலார்க்கும் உணர்த்தப்பட வேண்டுமென்பதற்காக மடலின் ஒரு பகுதியை மட்டும் வெளியிடுகிறோம். இது ஒரு நிலை விளக்கத்திற்காக இங்கு தரப்படுகிறதே தவிர, வாழ்த்துப் பத்திரங்களைத் தன் பத்திரிகையிலேயே பிரசுரித்து தானே படித்து மகிழும் "விசித்திர அரசியல் இலக்கண" முறையை சேர்ந்ததல்ல இஃது!

தற்போது நடைமுறையில் இருந்துவரும் சென்னை கிராமப் பஞ்சாயத்து சட்டமானது 1950-ம் வருடத்தில் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு ஓராண்டு தாமதித்து அமுலாக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ்தான் சுமார் 6000 பஞ்சாயத்துகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இச் சட்டத்தால் கிராம மக்களின் நிலை உயரும் என்றும், கிராமங்களின் சீர்திருத்தம், பொருளாதாரம் இவைகளில் ஓரளவுக்கு முன்னேற்றம் காணலாம் என்றும், பஞ்சாயத்து சபைகளுக்கு பூர்ண அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், அதன் வெளித் தோற்றத்தைக் கண்டு பெரிதும் ஏமாற்றம் அடைந்தோம். ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு பயன் ஏற்படாமல் எல்லா அதிகாரங்களும் மறைமுகமாக சர்க்காரிடமும், அதிகாரிகளிடமும்தான் இருப்பதை நடைமுறையில்—அனுபவ, சாத்தியத்தில் தெரியவந்தது

இந்த கிராமப் பஞ்சாயத்து சட்டத்தை நிறைவேற்றிய பெருமைகொண்டு புகழ்ந்து, இச்சட்டம் ஒரு தீர்க்கதரிசி போன்றது என்றும், இச்சட்டத்தால் நம் தேசப்பிதா காந்தியடிகள் கூறியதுபோல ராமராஜ்யம் ஏற்பட்டுவிடும் என்றும், அரசாங்கத்தின் முதுகெலும்புகள் போன்ற கிராம மக்களின் தரம், பொருளாதாரம், கிராம முன்னேற்றம் இவைகள் அனைத்தும் நிறைவேறிவிடும் என்றும், கிராம பஞ்சாயத்துகள் தங்கள் தங்கள் தேவையை ஸ்தல நிலைமைக்குத் தக்கவாறு சீர்திருத்திக்கொள்ள பஞ்சாயத்துகளுக்கு நிறைய அதிகாரங்கள் வழங்கப் பட்டிருப்பதாகவும் வானளாவப் பேசிய அதே தலைவர்களில் பலர் இச்சட்டத்தில் பல குறைகள் இருப்பதை இன்று ஒப்புக்கொண்டும் இருக்கின்றனர்.

இச்சட்டத்தால் ஏற்பட்ட பலன் என்னவென்று பார்த்தால், இந்த ராஜ்யத்திலுள்ள பெரும்பாலான பஞ்சாயத்துகளில் கட்சி, பிரதி கட்சிகள், ஜாதி துவேஷம் மக்களிடையே விரோத மனப்பான்மை, ஒற்றுமை குறைவு இவைகளைத்தான் இன்று நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஏன் இந்த அவல நிலை என்றால் சட்டமோ குறைபாடுகள் உடையதாகவும், அதிலும் சர்க்கார் தமக்குள் அதிகாரத்தைக் கொண்டு அவ்வப்போது பிறப்பிக்கும் நிர்வாக உத்திரவுகளோ அதைவிட விசித்திரமாக இருப்பதாலும்தான்.

வெள்ளையறிக்கை:

சமீபத்தில் ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் பல குறைபாடுகள் இருப்பதை நிவர்த்தி செய்யும் நோக்கத்தோடு முன்னாள் அமைச்சர் கனம் திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி அவர்கள் காலத்தில் சர்க்காரால் ஒரு வெள்ளை அறிக்கை தயாரித்து வெளியிடப்பட்டது. பெயரளவில் சீர்திருத்தம் என்று சொல்லி வெளிப்பட்ட அந்த அறிக்கையைப் பார்க்கும்போது பஞ்சாயத்துகளின் எதிர் காலமே இருண்டு பஞ்சாயத்துகளையே குழிதோண்டிப் புதைக்கும் நோக்கத்தோடு புறப்பட்ட ஒரு நாசகாரி போன்று இருக்கிறது. இந்த வெள்ளையறிக்கையைப் பற்றி அதிலுள்ள குறைபாடுகளையும், அது அமைய வேண்டிய முறைகளைப் பற்றியும், இது விஷயத்தில் அரசாங்கத்தின் பொறுப்புகளைப் பற்றியும், பஞ்சாயத்து நிர்வாகத்தில் அக்கரைகொண்ட ராஜ்ஜிய பஞ்சாயத்து யூனியனும், அநேக தாலூகா, ஜில்லா பஞ்சாயத்து சங்கங்களும் உடனடியாகத் தீர்மான ரூபமாக அரசியலாரின் கவனத்திற்கும், சில சட்டசபை அங்கத்தினர்களின் கவனத்திற்கும் கொண்டுவரப் பட்டுள்ளது. அந்த வெள்ளையறிக்கை சட்டசபையின் ஆலோசனைக்குக் கொண்டு வரப்படுமா; அல்லது கைவிடப் படுமா; என்ற முடிவை இப்போது சொல்லுவதற்கில்லை. பிரஸ்தாப வெள்ளையறிக்கை சட்டசபையின் ஆலோசனைக்கு வந்தால் பஞ்சாயத்துகளைப் பொறுத்த வரையில் ஒரு சில ஷரத்துகளைத் தவிர மற்றவைகளைத் தலைகீழாக மாற்ற வேண்டியது அவசியம் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறோம்.

தவிர, அண்மையில் புது மந்திரி சபை பதவி ஏற்றதும் ஸ்தல ஸ்தாபனங்களின் சீரமைப்புகளைப் பற்றி பரிசிலனை செய்ய அமைச்சர்களைக் கொண்டதொரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கேள்வியுற கொஞ்சம் மகிழ்ச்சியும் அடைகிறோம். இந்த அரியதொரு சந்தர்ப்பத்தைத் தாங்கள் பயன்படுத்தி பஞ்சாயத்துகளுக்கு நிறைய அதிகாரங்கள் வேண்டுமென்றும், அதிகாரிகளிடையே குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பல வகையில் பரவலாக இருக்க வகைசெய்து பஞ்சாயத்து சபைகள் கூடுமான வரையில் சுதந்திரமாகப் பணியாற்ற வகைசெய்ய தாங்கள் முயலுவீர்கள் என்றும் நம்புகிறோம்.

நிர்வாக அதிகாரிகள்:

பஞ்சாயத்துகளில் சுமார் 300 பஞ்சாயத்துகளை முதல்தர பஞ்சாயத்துகள் என்று சர்க்கார் பிரகடனம் செய்து, அவைகளின் நிர்வாகத்திற்கு உதவியாய் இருக்கும் பொருட்டு, நிர்வாக அதிகாரிகளை அரசாங்கம் நியமித்துள்ளது. சட்டத்தின் தன்மைக்கும் குறிக்கோளுக்கும் தற்கால நிர்வாக அதிகாரிகளின் பணி முற்றிலும் மாறுபட்ட வகைகளாக இருக்கிறதென்பதை நாங்கள் பல அனுபவச் சான்றுகளால் கூறிக்கொள்ள விரும்புகிறோம். நிர்வாக அதிகாரிகளின் சம்பளமோ மிக மிகக் குறைவு. அதிகாரமோ அவர்கள் சுமக்க முடியாத அளவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் பஞ்சாயத்துகளுக்குப் பணியாற்ற நியமிக்கப்பட்டிருக்கும் நிர்வாக அதிகாரிகள், பஞ்சாயத்துகளுக்கும், கிராமத்திற்கும் எஜமானர்கள் போல் காட்சியளிக்கிறார்கள் என்று கூறினால் அது மிகையாகாது. இந்த அவல நிலை மாற வேண்டும். பஞ்சாயத்துகளுக்காக நியமிக்கப்பட்டிருக்கும் நிர்வாக அதிகாரிகள் பஞ்சாயத்துகளுக்குக் கட்டுப்பட்டு செயலாற்றவேண்டும். இன்று ஜில்லா போர்டுகளிலே இருப்பதுபோல நிர்வாக அதிகாரிகள் பஞ்சாயத்துகளுக்கு காரியதரிசிகளாக இருந்து பணியாற்றுவதற்கு சட்டங்களைத் திருத்தியமைக்க வேண்டும். தவிர இன்றைய பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் பஞ்சாயத்துகள் சுதந்திரமாகத் தம் இஷ்டம்போல் ஒரு கீழ்த்தர சிப்பந்தியைக்கூட நியமிக்க முடியாது. சிப்பந்திகள் தவறு செய்தாலும், அதை ஏன் என்று கேட்கக்கூட உரிமையில்லை இன்றைய பஞ்சாயத்து சபைகளுக்கு. சிப்பந்திகளை மேற்பார்வையிடுதல், குற்றம் செய்பவர்களைத் தண்டித்தல், நியமனம், நீக்கல் இவைகளைப் போன்ற அதிகாரங்கள் எல்லாம் நிர்வாக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. நிதி விஷயத்திலோ, நிர்வாக அதிகாரிகள்தான் பஞ்சாயத்து நிதிக்குப் பொறுப்பு என்றும், பஞ்சாயத்து நிதியைச் செலவிடுதல், பணம் பட்டுவாடா செய்தல், செக்குகளில் கையெழுத்திட்டு பணம் பெறுதல்-இவைகள் அனைத்தும் நிர்வாக அதிகாரிகளின் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும். பஞ்சாயத்துகளில் சிப்பந்திகள் நியமனம், நீக்கல், தண்டித்தல்முதலியவைகள் பஞ்சாயத்தைக் கலந்து அதன் அங்கீகாரம் பெற்றுத்தான் செய்யவேண்டும் என்றும், நிதி விஷயத்தில் பஞ்சாயத்துநிதிக்குபஞ்சாயத்துத்தலைவரும், நிர்வாக அதிகாரியும் கூட்டுப் பொறுப்புடன், இருவரும் சேர்ந்து செக்குகளிலோ அல்லது அஞ்சல் நிலைய கணக்குகளிலோ கையெழுத்து இட்டுத்தான் பணம் பெற வேண்டும் என்றும் சட்டத்தைத் திருத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் பஞ்சாயத்துகளில் ஏற்படும் குறைகளையும். கஷ்டங்களையும் ஓரளவுக்குத் தவிர்த்து, கிராம முன்னேற்றத்திற்குப் பாடுபட பஞ்சாயத்துகளுக்குப் போதிய சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் நாங்கள் கருதுகிறோம்!

தனி இலாக்கா:

வருங்கால சரித்திரத்திலே பஞ்சாயத்துகள்தான் முன்னேற்றம் அடைந்து, மக்களிடையே நேரிடையான தொடர்பு கொண்டுள்ள ஸ்தாபனங்களாக விளங்க முடியும்.

அவைகளை சட்டத்தினால் கட்டுப்படுத்தி நல்லமுறையில் செயலாற்ற முடியாவண்ணம் செய்வது விரும்பத்தக்கதல்ல. இந்த ராஜ்பத்திலே ஸ்தல ஸ்தாபனங்கள் என்று சொல்லப்படும் நகரசபைகள், ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்து சபைகள், இவைகளில்அதிக எண்ணிக்கை கொண்டதும், மக்களிடையே நேரிடையான தொடர்பு கொண்டதுமான பஞ்சாயத்து சபைகள், இன்றைய சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு கஷ்டத்துடன் மக்களுக்குச் சேவை செய்து வருகின்றன.

இவைகள் சுதந்திரமாகவும், ஸ்தல நிலைக்குத் தக்கவாறும் பணியாற்ற பஞ்சாயத்துகளுக்காக ஒரு தனி இலாக்காவை அரசாங்கம் ஏற்படுத்தி, அதற்கென ஒரு தனி அமைச்சரை நியமிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று நாங்கள் கருதுவதை நீங்களும் ஒப்புக்கொண்டு, பஞ்சாயத்துகளின் விஷயத்தில் விசேட அக்கரை கொண்டு, எங்கள் வேண்டுகோள் அனைத்தையும் ஏற்று அரசாங்கத்திடம் எங்கள் குறைகளைச் சொல்லி ஆவன செய்வீர்கள் என்று நம்புகிறோம்.

சிறுகதை

அந்த மருந்து...?

அ. ராஜா எம். ஏ., எம். எஸ்ஸி.

சென்னை மாநகரத்திலேயே புதுப்பேட்டை வாசிகளைக் கொஞ்சம் பாக்கியசாலிகள் என்றே கருதவேண்டும். அவ்வளவு வசதிபடைத்தவர்கள் அவர்கள். பரந்த இந்நகரத்தில் எதற்கெடுத்தாலும், எங்கு செல்ல வேண்டுமானாலும். பஸ்ஸுக்காகத் தவம்கிடப்பதும், அதற்காகப் பணத்தைக் கொட்டி அழுவதும், ஒரு தொல்லையாக இருக்கும் பொழுது, அந்தத் தொல்லை இல்லாத அவர்கள் கொடுத்துவைத்தவர்கள் தான்!

'ரவுண்டான'வைச் சுற்றியுள்ள மவுண்ட்ரோடுப் பகுதியை சென்னையின் இதயம் என்று கூறுவோமானால், புதுப்பேட்டையை அவ்விதயத்தில் செல்லும் முக்கிய இரத்தக் குழாய் என்றே சொல்லவேண்டும்.

அங்கே உள்ளதுதான் துரைசாமியின் குடும்பம்...யாரும் புலன் விசாரித்துப் பொழுதை போக்கிக்கொள்ள வேண்டாம்...இது வெறும் கற்பனை தான்!

துரைசாமிக்கு சொத்து, நிலபுலன், வீடுவாசல், அப்படி ஒன்றும் சொந்தத்தில் கிடையாது. சின்னதும் சிறிசுமாக அரை டஜன் குழந்தைகள் உண்டு. ஆனால் தனக்கு மில்லிலிருந்து வருகிற சம்பளத்தில் பூட்டி, எடுத்து, வைத்து நல்ல விதமாக, நாலு பேர் கண்ணியமாக மதிக்கும்படி காலச் சக்கரத்தை ஓட்டி வந்தார். அவர் மனைவி முத்தம்மாள் முதன் முதலாக ஈன்ற பெண்செல்வம் தான் கமல்! கமலா என்பதின் சுருக்கம் போலும்!

காண்பவர் கருத்தை அள்ளும் கட்டழகியாகஇல்லாவிட்டாலும், பருவத்திற்கேற்ற உருவும், திருவும், பிறவும் பெற்ற பூங்கொடிதான் கமல்! வயது பதினேழாகியும் மாநில உயர்நிலைப் பள்ளியில் அவள் ஐந்தாவது 'பாரம்'தான் படித்துக்கொண்டிருந்தாள். அதற்குக் காரணம், ஒரே வகுப்பில் பல முறை அவள் படையெடுத்ததால் அல்ல; துரைசாமிக்கு இளவயதில் அடிக்கடி வேலை மாற்றங்கள் ஏற்பட்டதால் தான்.

பாஸ்கரன், துரைசாமிக்கு தூரத்து உறவு. 'இன்டர்' முடித்துவிட்டு, பி. காம் (ஆனர்ஸ்) படிப்புக்காக பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து, ஹாஸ்டலில் தங்கியிருந்த அவன், ஒரு நாள் உறவினராயிற்றே என்று தான் புதுப்பேட்டைக்கு வந்தான். அப்பொழுது அவனுக்குத் தெரியாது, தன் இதயத்தைப் பறித்துவிடும் புதையல் ஒன்று தையல் உருவிலே அங்கு இருக்கிறது என்று!

விவரிப்பானேன்? விழிகள் ஓரத்திலே ஆயிரம் எண்ணங்கள் விழுந்தன; நெஞ்சு உறவாடியது; காதல் சதிராடியது!

சந்திப்புகள் வளர்ந்தன; புதுப்பேட்டையில் அல்ல; பீச்சில், பூங்காவில், பள்ளியில்!

ஒருநாள் சந்திக்காவிட்டால் உலகமே சூன்யமாகி விட்டது போல் இருக்கும் அவர்களுக்கு. உறக்கம் கொள்ளாது. உணவு பிடிக்காது. உன் மத்தம் பிடித்தவர் போலாகி விடுவர். கல்லூரியின் இடை நேரச் சமயத்திலோ அல்லது இறுதியிலோ, ஹாஸ்டலிலிருந்து சைக்கிளில் பறந்து வருவான் பாஸ்கரன், தன் பசுஞ் சோலைக் கிளியைப் பார்ப்பதற்கு! சில சமயங்களில் ஐந்து பத்து நிமிடங்களில் அவர்கள் பேட்டி முடிந்துவிடும். சில சமயங்களில் மாலை ஆறு மணிக்குத்தான் வீடு திரும்புவாள் கமல். ஏன் என்றால், வீட்டிலே கூசாமல் பொய் சொல்லுவாள், அன்று 'டான்ஸ்' ஒத்திகை—'டிரில்' வகுப்பு—'மீட்டிங்' என்று. ஆனால் உண்மையில் காதலர் 'மாட்னி ஷோ'வுக்குப் போயிருப்பார்கள்!

ஓராண்டுக் காதல் இப்படி உரையாடலில் சென்றது. எவ்வளவு நாள்தான் அவ்விரு உள்ளங்களும் சலனப்படாமல் இருக்க முடியும்? வாயளவில் அன்பு பரிமாறிக்கொண்டிருந்தால் வழுக்கிவிழாமலா இருக்க முடியும்? உதட்டு உரையாடல், உடல் உறவாடலுக்குத் தாவினால்...? பின் ருசி கண்ட பூனை உறியைத் தாவுவதும், இரத்தப் பசி பிடித்த வேங்கை, மோப்பம் பிடிப்பதும் இயற்கை தானே! பஞ்சும் பொதியும், நெருப்புப் பொறியும் இடையில் திரையிட்டுக் கொண்டால் ஆபத்தில்லை; நெருங்கிவிட்டால்...? அந்த விளைவுதான் ஏற்பட்டது இக்காதல்நெஞ்சங்களுக்கும் ஒரு நாள்!

அன்று முதன்முதலாகஅடையார் 'எலியட் பீச்'சுக்குச்சென்றனர். மாலை வேளை; மஞ்சள் வெயில் மறைந்தது; மணல் வெளி அவர்களுக்கு ஊஞ்சலாகியது; மந்தமாருதம்தாலாட்டுப் பாடியது. ஏகாந்தமான இடம்; ஏன் என்று கேட்க, ஏளனம் பேச, தூண்டிக் காட்ட, தட்டிக் கேட்க, எவருமேயில்லை, ஆலிங்கனமும், அமுத முத்தங்களும் அவ்விரு உடல்களையும் உணர்ச்சி வயப்படுத்திவிட்டன! திறந்த வெளியாக இருக்கின்றதே என்று திகைத்துக் கிடந்த அவர்களுக்கு, அங்கு கடலோரமாக இருந்த கீற்றுக் குடில்கள் குற்றூலமாகக் காட்சி யளித்தன! கட்டிலும் நாற்காலிகளும் போடப்பட்டுள்ள அவ்விடத்தில்தான் அடையார் சொஸைடி'யைச் சேர்ந்த வெள்ளையர்கள் கடல் நீராடிவிட்டு, உடை மாற்றி, சிறிதுநேரம் உல்லாசமாக இருப்பர் உரையாடிக் கொண்டே. அவ்விடம்தான் காதலர்களுக்கு சயன அறையாகியது!

பயந்தாள் பாவை; பாகு மொழி பேசினான் பாஸ்கரன். 'கைவிடமாட்டீர்களே' என்றாள்; 'கல்யாணத்தை மறந்து விடேன்' என்று பதிலிறுத்தான். மீண்டும் வாய் பேசாத அவர்கள் நோய் தீர்த்தனர்; திரும்பினர்!

★

மாதம் ஒன்று கழிந்து இரண்டாகியது. மாறுதலைப்பற்றி சந்தேகப்பட்டாள் கமல். மூன்றும் மாதம் 'மசக்கை' உண்டாகியது. குமட்டல் எடுத்தது: வாய் கசந்தது; மாங்காயும் புளியும் பிரியமானப் பொருள்களாகத் தென்பட்டன அவளுக்கு!

விஷயத்தைக் கேட்ட பாஸ்கரனின் அத்தனை நாடிகளும் ஒய்ந்துவிட்டன; என்றாலும் அசந்துவிடவில்லை அவன். சிலரைப்போல் 'உனக்கு வந்த விதிக்கு நான் என்ன செய்வேன்' என்று கைகழுவிவிட்டு ஓடிவிடவில்லை. அவனுக்குத் தான் அவளைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று கொள்ளை ஆசையாயிற்றே' ஆனாலும் காலம் கனியாதிருக்கும்போது காதல் கனி தந்தால்...? எனவே ஊர் உலகத்தின், உற்றார் பெற்றோரின் கண்களிலிருந்து அதை மறைத்துவிடக் கூட்டுச் சதி உருவாயிற்று!

"பப்பாளிப் பழத்தின் விதைகளை அரைத்துச் சாப்பிட்டால் சரியாகப் போய் விடுமாம் அத்தான்!"-பேதை பாதை காட்டினாள்!

"பைத்யக்காரி! அதெல்லாம் சங்கடம்; நாலு பேருக்குத் தெரிந்துவிடும் அதற்குக் கண் கண்ட மருந்து எனக்குத் தெரியும். வாங்கிவருகிறேன்" என்று காயம் உண்டாக்கியவன் தன் காதலியைத் தட்டிக் கொடுத்தான்!

காதல் விரவு தந்த கொம்புத் தேனை, கோதுபடா மாங்கனியை, கட்டிப் பொன்னை, பட்டுக் கயிறை, உருத்தெரியாமல் ஆக்கிவிட்டது அவன் தந்த மருந்து!

தவறு செய்கசில உள்ளங்கள் அதனால் தீங்கு ஏற்பட்டால் திருத்திக்கொள்கின்றன. ஆனால் செய்த தவறு காட்டிக் கொடுக்காமல் இருந்தாலோ, அல்லது காட்டிக் கொடுக்கும் வழியைக் கசக்கி எறிந்துவிடப் பாதை தெரிந்து விட்டாலோ மீண்டும் மீண்டும் தைரியமாக அத்தவறையே செய்கின்றது மனித உள்ளம். அதனால்தான் இக்காதலர்களும் மூன்று நான்கு முறை அடையார் நிகழ்ச்சியைப் புதுப்பித்துக் கொண்டனர்!

★

படிப்பும் முடிந்தது. பாஸ்கரனுக்குத் தங்கள் பெண்மேல் விருப்பம் இருப்பதைக் கண்ட கமலின் பெற்றோரும் திருமணத்தை முடித்துவிட ஆசைப்பட்டனர். ஆனர்ஸ்பட்டதாரி; இருநூறு ரூபாய் சம்பளம் பாங்கில்; அவனை மருமகனாகப் பெற விருப்பப்பட்டதில் ஆச்சரியமில்லை "காதல் பாதை கரடுமுரடானது; அது எப்பொழுதுமே சோக முடிவைக் கொண்டுதானிருக்கும்; அப்படி இப்படி என்று எழுதுகிறார்களே பாவம்! அவர்களெல்லாம் காதலில் தோல்வி கண்டவர்கள் போலும்' என்று எண்ணி மகிழ்ந்தான் பாஸ்கரன்.

திருமணம் தடபுடலாக நடந்தது தோழர்களும் தோழியர்களும் 'கொஞ்ச காலத்திற்காவது, கையில் 'ஆராரோ' இல்லாமல் ஜாலியாக இருங்கள்' என்று கிண்டல் கணைகளைத் தொடுத்தனர்.

அவர்கள் விருப்பப்படியே இயற்கையும் துணைபுரிந்தது. இரண்டாண்டு காலத்திற்கு அவர்கள் எப்படியோ மகவு இல்லாமலே சமாளித்துவிட்டனர். என்றாலும் ஒரு பெண்ணுக்குத் தாய்மை நிலையை அடைய ஆசைவராதா? பத்து மாதம் சுமந்து, பெற்று, மார்பகத்தின் மூலம் தன் மதலைக்கு அன்பையெல்லாம் அள்ளிச் சொரிந்து, மடியிலே இட்டுத் தாலாட்டி, சங்கிலே மருந்து புகட்டி, அக்குழவி குப்புற விழுந்து குமிழ்ச் சிரிப்பு காட்டும் பொழுது குவலயத்தையே மறந்து, சிறு காட்டி, எழில் காட்டி, இருகை நீட்டி சிறுகவளச் சோறுவாங்கி உண்ட பிறகு வாயை முத்தத்தால் கழுவி, பொன்னூலை அம்மானை, வண்ணக்கிலுகிலுப்பை, பிறை நிலா நெற்றிக்குப்

✻ 8-ம் பக்கம் பார்க்க

"பாரத் சேவக் சமாஜ்" பெண்கள் முகாம் கொடவாசலில் நடைபெற்று வருவதை யொட்டி 26—5—57 மாலை 4 மணிக்கு தோழர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் தோழர் மு. கருணாநிதி ஒரு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். சமாஜத்தின் தலைவி பார்வதி அம்மையார் அறிக்கையைப் படித்து, அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். முகாம் பெண்மணிகளால் பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியில் "கலையும் மனிதனும்" என்ற தலைப்பில் மு. க. ஒருமணி நேரம் பேசினார். அதன் சுருக்கமிது!

பணி புரியும் பாவையர் பாசறையைச் சேர்ந்த அருமைச் சகோதரிகளே! இந்தப் பாசறையின் சார்பில் என்னை அழைத்து சிறப்புரை நிகழ்த்துமாறு கேட்டுக் கொண்ட அனைவருக்கும் நான் நன்றி கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தன்னுடைய உரையிலே, குறிப்பிடும் போது "நான் சார்ந்திருக்கிற கழகத்தின் சார்பாக பல முறைக் கூப்பிட்டும் அதற்கெல்லாம் வராத கருணாநிதி, இப்போது வந்திருக்கிறார்!"—என்று பெருமையோடும், ஜாடையாக என்னைக் குற்றம் சாட்ட வேண்டும் என்ற தோரணையிலும் குறிப்பிட்டார். இம்மாதிரியான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுகிற நேரத்தில், உள்ளூரில் என்னுடைய கழகத்தைச் சேர்ந்தவர்களை கேளாது ஒப்புதல் தருவதில்லை. அதைப் போலவே முறைப்படி நண்பர் கிருஷ்ண மூர்த்தி அவர்களைக் கேட்டுக் கொண்டு, அவரும் ஒப்புதல் அளித்த பிறகே இந்த விழாவிலே நான் கலந்து கொள்ளுகிறேன். சொந்தப் பிள்ளையை நாமே கொஞ்சிக் கொண்டு இருப்பதைவிட, அடுத்த வீட்டுக்காரரையும் கொஞ்ச விடுவதுதான் முறை; நல்லது; இந்த நாட்டிலே பரம்பரை பரம்பரையாக தமிழ்க் குடும்பங்களிலே வளர்ந்து வருகிற ஒரு நிலையும் ஆகும். தோட்டம் விளைத்த தோட்டக்காரன், நம்முடைய தோட்டத்தில் விளைந்த ரோஜா மலர்தானே; இதை அடுத்தவர்கள் வைத்துக் கொள்ளக் கூடாது; தானும் தன்னுடைய வீட்டிலே இருப்பவர்களும்தான் வைத்துக் கொள்ள வேண்டும்—என்று கூறுவது சுத்த சுயநலமாகி விடும். அடுத்தவர்கள் சூடிக் கொண்டு 'உன்னுடைய தோட்டத்து மலர் மிகமிக மென்மையான மலர்; மிகமிக எழிலான ரோஜா!' என்று பாராட்டும் போது தோட்டக்காரனுக்கு ஏற்படுகிற மகிழ்ச்சி நண்பர் கிருஷ்ண மூர்த்தி அவர்களுக்கு இப்போது ஏற்பட வேண்டும்; அது ஏற்படவும் செய்கிறது. ஆனால் அதை மறைத்துக் கொண்டு ஏன்னைக் குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காக வேடிக்கையுரை கூறினார் என்று நான் கருதுகிறேன்.

இன்றைய தினம் என்னை வரவேற்று, இந்த விழாவினை ஏற்பாடு செய்தவர்கள் மிக மிக அழகான கலை நிகழ்ச்சிகளையும், கருத்து பொதிந்த இசை நிகழ்ச்சிகளையும், இந்த நாட்டுக்குத் தேவையான சீர்திருத்தக் கருத்துக்களையும், சிறு ஓரங்க நிகழ்ச்சி மூலமாகவும், நடனம் மூலமாகவும் எடுத்துக் காட்டினார்கள். மதுவிலக்கு நடன நிகழ்ச்சி நடைபெறுகிற நேரத்தில் நான் கொஞ்சம் ஆச்சரியப்பட்டுக் கொண்டேன்; இந்த நாட்டிலே மதுவிலக்கு வந்து வெற்றிகரமாக நடைபெறுகிற—அல்ல: அல்ல; நடைபெறுவதாக சொல்லப்படுகிற நேரத்திலேகூட இப்படி ஒரு நிகழ்ச்சி தேவைதானா—என்று! ஆனால் இந்த நடன நிகழ்ச்சி இங்கே நடிக்கப்பட்டதிலிருந்து இந்த நாட்டிலே மதுவிலக்கு சரியானபடி அமுலாகவில்லை என்பதும், மதுவிலக்கு சரியானபடி வெற்றி பெற வேண்டுமானால் மக்களின் மனத் தெளிவுதான் மிக மிக முக்கியம் என்பதையும் இந்தப் பாசறையிலுள்ள பெண்மணிகள் ஜாடையாக சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்றுதான் நான் எண்ணிக் கொண்டேன்.

மதுவிலக்கு நடனத்திலே பாடிய தோழியர் பாட்டை மறந்து விட்ட காரணத்தால் பாடியதையே திரும்பத் திரும்பப் பாடினார்கள் என்றாலும், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தலைப்பு 'கலையும் மனிதனும்' என்ற காரணத்தால், அதையும் ஒரு கலையாக நான் எடுத்துக் கொண்டேன். ஏனென்றால், அந்தப் பாட்டைத் திரும்பத் திரும்பப் பாடியவர் ஆண் வேடத்திலே இருக்கிற குடிகாரர். அவர் குடித்திருக்கிற காரணத்தால்தான் திரும்பத் திரும்பப் பாடினார் என்று நான் கருதினேனே தவிர, மறந்துவிட்டார் என்று நான் எண்ணவில்லை. இது இந்த நாட்டிலே பரம்பரை பரம்பரையாக குற்றங்களைக் கூட—தவறுகளைக்கூட — கலையுணர்ச்சியோடும், கலைக் கண்ணோடும் பார்க்கின்ற நிலைமை வளர்ந்து வருகிற தன்மையைக் காண்பிப்பதாகும்.

உதாரணமாக, சென்ற மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, ராமனாதபுரத்தில் நடைபெற்ற ஒரு 'அமைச்சூர்' நாடகத்துக்கு நான் தலைமை வகித்தேன். நாடகத்தை நான் காணுகிற நேரத்தில், அதில் பல நிகழ்ச்சிகளை மக்கள் அதிருப்தியோடு வரவேற்றார்கள். மிகமிகப் புதிய நடிகர்கள்—மேடைக்குப் பழக்கமே இல்லாதவர்கள் என்கின்ற காரணங்களால், அவர்களிடையே அநேகக் குறைபாடுகள் காணப்பட்டன. அவைகளில் மிகமிக முக்கியமான குறைபாடு என்னவென்றால், அந்த நாடகத்திலே ஒரு முதலாளி வருகிறார்; ஆத்திரமடைந்த ஒரு தொழிலாளி ஒரு புரட்சிக் கட்டத்தின்போது தன் கையிலே உள்ள தடியால் அந்த முதலாளியின் தலையில் ஓங்கி அடிக்கிறான்; முதலாளி சுருண்டு கீழே விழுந்தார்; உடனே நாடக டெக்னிக்படி—விளக்கு அணைக்கப்பட்டு, திரை கீழே விடப்பட்டது; திரை விழுந்த பிறகு மறுபடியும்விளக்குப்போட்டார் அடுத்த சீனுக்காக! ஆனால் விழுந்த திரை முழுவதும் விழவில்லை; ஆனாலும் மக்களுக்கு நேராக இறந்துவிட்டதாகக் காட்டப்பட்ட முதலாளி திடீரென எழுந்து உள்ளே ஓடினார்; அவர் ஓடுவது விளக்கு போட்ட காரணத்தால் மக்களுக்குத் தெரிந்தது; ஓடுகிற நேரத்திலே 'ஐயோ, எழுந்து விட்டானே' என்று பயந்து கொண்டு திரை விடுகிறவன்காரன் மறுபடியும் திரையை விட்டான்; அது ஓடிய முதலாளியின் தலையிலே விழுந்து அடிபட்டு மீண்டும் முதலாளி வேடக்காரன் கீழே விழுந்தான்; மக்கள் நகைச் சுவைக்கு நல்ல கட்டம் கிடைத்தது என்று கருதவே நாடகக் கொட்டகையிலே சிறு சிறு கூச்சலும் குழப்பமும் தொடர்ந்தது. அதற்குப் பிறகு நான் அவசர அவசரமாக நாடக மேடைக்குச் சென்று தலைமையுரையை நானே வலுவிலே ஆற்றத் தொடங்கினேன். அப்போது மக்களிடையே சொன்னேன்: "நீங்கள் ஏதோ தவறுதலாகப் புரிந்து கொண்டீர்கள். இந்த முதலாளியைத் தொழிலாளி அடித்தான்; அடிபட்ட முதலாளி கீழே விழுந்து செத்தான்; செத்த பிறகு மறுபடி உயிர் பெற்று எழுந்தான்; ஓடுகிற நேரத்திலே திரைக் கம்பு தலையில் விழ மறுபடியும் கீழே விழுந்தான்; அது எதற்காக என்றால், ஏதும் தவறுதலாக நடந்துவிடவில்லை. தொழிலாளி அடித்தும்கூட சாகாத முதலாளி, மறுபடியும் மறுபடியும் இந்த முதலாளி வர்க்கம் சாகாது என்று காட்டுவதற்காக எழுந்தார்; அப்படி எழுந்தாலும் இந்தஉலகம் அவர்களைவிடாது என்று காட்டுவதற்காகதிரைக் கம்பு மேலே விழுந்தது. இப்படித்தான் நாம் விளக்கம் பெற வேண்டும்!" என்று எடுத்துக் காட்டினேன்.

ஆகவே தவறுகளையும்—குறைகளையும்கூட கலைக் கண்களோடு பார்க்கின்ற தன்மை தமிழருக்குரிய மிக மிக நல்ல வழக்கமாக இருக்கிறது. அதற்காகத் தவறுகளையே கலைக் கண்ணோடு பார்த்து, அப்படிப் பார்க்கிற காரணத்தால் தவறுகளை எல்லாம் சரியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமா—என்பதும் முழுவதும் ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. இம்மாதிரியான தவறுகள்—மன்னிக்கக் கூடிய பிழைகள்—நமக்குநாமே சரி செய்து கொள்ளக்கூடியவைகள்! சமுதாயத்திற்கும், அறிவுக்கும் கேடு பயக்கக் கூடிய தவறுகள் பலவற்றை கலைக் கண்ணோடு நோக்கி—நாட்டுக்கே தீமையை உண்டாக்குகிற மனப்பான்மை தொலைய வேண்டுமென்பதிலே அக்கரை கொண்டவன் நான்! ...எனக்குத் தரப்பட்ட தலைப்புக்கு ஒத்து வருகிற காரணத்தால் இதைக் குறிப்பிடலானேன்.

எனக்குத் தரப்பட்டிருக்கிற தலைப்பு 'கலையும் மனிதனும்' என்பது—இந்த தலைப்பு பல இடங்களிலே தருவது போல, நானே தந்த தலைப்பு அல்ல; இந்தப் பாசறையிலே உள்ளவர்கள் தந்த தலைப்பாகும். இந்த உலகத்துஉயிர்ப் பொருள்கள் அத்தனையிலும்—மனிதன் ஒருவன்தான் கலையை உணருகிறவன்; அச் சக்தி படைத்தவன்; கலைகளைப் பலவிதமாகப் பாகுபாடுபடுத்தி—அப்

மு. கருணாநிதி

மூங்கில் துளையில் ★ ★ ★ ★ எழும்பிடும் நாதம்!

படிப் பாகுபாடு படுத்திய கலையிலே ஓவியக் கலை, சிற்பக் கலை, இலக்கியக் கலை என்று மிகமிக நுட்பமாக ஆராய்கிறவன் மனிதன் ஒருவன்தான். 'மிருகங்களும், கலையும்' என்று ஏன் போட்டிருக்கக்கூடாது? காரணம், மிருகங்கள் கலையுணர்ச்சி அற்றவைகள்; அவைகள் கலையுணர்வோடு தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றவைகள் அல்ல; மிருகங்கள் உயிர் வாழுகின்றன; மனிதனோ வாழ்க்கை நடத்துகிறான். மிருகங்களுக்கும் வாழ்க்கை உண்டு. மனிதர்களுக்கும் வாழ்க்கை உண்டு; வாழ்க்கை என்பது மனிதனுக்கும் மிருகத்துக்கும் பொதுவான ஒன்றுதான் என்றாலும், மனிதன்வாழ்க்கை நடத்துகிறான்; மிருகங்கள் வாழ்க்கை நடத்துவதில்லை; உயிர் வாழுகின்றன!

மனிதன் வாழ்க்கை நடத்துகிற நேரத்தில்; வாழ்க்கைக்குத் தேவையானவைகளை —வசதியானவைகளைச் செய்து கொள்ளுகிற நேரத்தில்; முதலிலே அவைகளைக் கரடு முரடாகச் செய்தாலும் — நாகரீகமற்ற முறையிலே செய்தாலும் —வாழ்க்கை நடத்துகிற நேரத்தில் கலையுணர்வும் அவனோடு சேர்ந்து சேர்ந்து— இணைந்து இணைந்து—பொருந்திப் பொருந்தி வாழத் தலைப்பட்டான். நாம் உலக சரித்திரத்திலே மனிதனுடைய வாழ்க்கை ஆரம்பமாகிற கட்டத்திலிருந்து பார்ப்போமேயானால்—பச்சை மாமிசத்தைச் சாப்பிட்டு — மரப் பட்டைகளிலே எழுதி—குகைகளிலே வாழ்ந்து — புதர்களிலே படுத்துத் தூங்கி—ஆகாயத்தையே கூரையாகவும், தரையையே தன் வீட்டுக் கூடமாகவும் கருதிக் கொண்டு வாழ்ந்த மனிதனின் வரலாறு—மனிதன் கலையுணர்ச்சியோடு வாழத் தலைப்பட்டதை எடுத்துக் காட்டுகிறது.

முதலில் அவனுக்கு உணவு தான் தேவைப்பட்டது என்றாலும், அடுத்து அவனுக்கு வேறு ஒன்று தேவைப்பட்டது. அவனது வயிற்றுப் பசி அடங்கிய பிறகு அவன் சிந்திக்கத் தொடங்குகிறான். சிந்திக்கத் தொடங்கிய காலத்திலேயே கலையுணர்வும் அதோடு சேர்ந்து எழத் தொடங்கிவிட்டது. நீங்கள் படித்திருக்கலாம் சிலர்; கேட்டிருக்கலாம் பலர்; இன்று நாம் காணுகிற பலபல அதிசயப் பொருள்களுக்கெல்லாம் வித்திட்டதுபோல பழைய கலையுணர்ச்சியோடு கூடிய நாகரிகங்கள் அந்தக்காலத்திலேயே தோன்றியிருக்கின்றன.

மனிதன் ஒரு மிருகத்தை வேட்டையாடித் தின்றுவிட்டு, அதன் தோலை ஒரு மரத்திலே போட்டிருக்கிறான். காயவைப்பதற்காக—என்று அவன் அங்குப் போடாவிட்டாலும், ஏதோ அங்குப் போடுவோம் என்று வீசி எறிய—அந்தத் தோல் நன்றாகக் காய்ந்து—காற்றடித்த காரணத்தால் மரக்கிளை பட்டுப்பட்டு—படுகிற நேரத்திலே ஒரு ஒலி உண்டாக—அதைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற மனிதன் அந்த நிகழ்ச்சிபற்றி சிந்திக்கிறான். அதன் பிறகு அத்தகையத் தோல்களை தானே காயவைத்து, கொம்புகளைத் தானே ஒடித்து, காய்ந்திருக்கிற தோலிலே தானே தட்டிப் பார்த்து ஒலி உண்டாக்குகிறான். பிறகு அப்படி ஒலி உண்டாகிற காய்ந்த தோலை இன்னொரு பொருளிலே கட்டி—மரக் கிளையினால் அடித்து அடித்து ஒலி உண்டாக்கினான். அதுதான் பறையாக—போர் முரசாக—ஒரு காலத்தில் அரசர்கள், பகைவர்கள் தங்கள் நாட்டின்மீது படையெடுத்து வருகின்றநேரத்தில் மற்றவர்களுக்கு அறிவிக்கின்ற முரசமாகவும், இன்னொரு நாட்டிலே பெற்ற வெற்றியை நாட்டு மக்களுக்கு அறிவிக்கின்ற வெற்றி முரசமாகவும்—மகிழ்ச்சி நாட்களைக் கொண்டாடுகின்ற மங்கல முரசமாகவும்— பயன்பட்டது என்பதை நாம் அறிகிறோம்.

இதற்குக் காரணம் மனிதன் சிந்தித்தான். அந்தச் சிந்தனையிலே விளைந்த கலை உணர்வு காய்ந்த தோலை ஒரு பொருளிலே கட்டச் செய்தது; கட்டப்பட்ட தோல் கடைசியிலே முரசமாக மாறியது!

மூங்கில் கம்பிலே வண்டு துளைக்க—துளைத்த காரணத்தால் துவாரங்கள் ஏற்பட— அந்தத் துவாரங்களிலே தென்றல் நுழைய — நுழைந்த தென்றல், அங்கிருந்து வெளிக் கிளம்பி போகிற நேரத்திலே ஒரு ஒலி உண்டாக— 'இது எப்படி உண்டாகிறது?' என்று யோசித்துப் பார்த்து, காதை வைத்துக் கேட்டு, அந்த ஒலி எங்கேயிருந்து வருகிறது என்று ஆராய்ந்து, மூங்கில் குழாயில் காற்று நுழைந்து வெளிவருகிற காரணத்தால் அதிலிருந்து ஒலி உண்டாகிறது என்று கண்டு பிடித்து, அவனும் அதைப் போல மூங்கில்களை வெட்டி, துளை போட்டு, தன்னுடைய வாயில் வைத்து, அதை ஊதிக் காட்டிய நேரத்தில், அங்கிருந்து நாதம் எழும்பியது! ஒலி கிளம்பியது! அதையே அவன் குழலாக—புல்லாங்குழலாக மாற்றிக் கொண்டான்.

இப்படி இயற்கையைக் கண்ட மனிதன் அதிலே கலையம்சத்தையும் சேர்த்த காரணத்தால், மக்களுக்குத் தேவையான பல பல நல்ல பொருள்களை தரக்கூடிய அளவுக்குப் பக்குவம் பெற்றான்.

★

மனிதன்கலா உணர்ச்சியோடு வாழுகிற நேரத்திலேதான் அவன் மற்றவர்களோடு பழக முடிகிறது. இங்கே இருக்கின்ற பெண் மக்கள் சேரிகளுக்குச் சென்று, அங்கே நாகரீகமற்று இருக்கின்ற ஆதி திராவிடப் பெண்மணிகளையும், அவர்கள் வீட்டு அரும்புச் செல்வங்களையும் அழைத்து நிறுத்தி, பரட்டையாக இருக்கிற தலைகளிலே எண்ணெயிட்டு சீவி, அவர்களுடைய கருத்திருக்கிற முகங்களிலே அழகான பொட்டுகளை இட்டு, நல்ல வெள்ளை உடைகளை உடுக்கச் செய்திருந்தார்கள் என்றால், அதிலே சுத்தமாக இருக்கவேண்டும் என்பது மாத்திரம் பொதிந்து கிடக்கவில்லை. அங்கே கலையழகும் மின்னுவதைக் காண்கிறோம். ஆகவேதான் 'கலையும் மனிதனும்' என்ற தலைப்பு மனிதன் கலையம்சத்தோடுதான் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்திக் காட்டுகிறது.

★

கிரேக்கத்திலே ஓவியக்கலை பன்னெடு நாட்களுக்கு முன்பு நல்ல முறையிலே பரவி வளரத் தொடங்கியது. அங்கு இருந்த ஓவியர்கள் இயற்கைக்கு முரண்படாத அளவிலே ஓவியங்களைத் தீட்டிக் காட்டினார்கள். நாவலர் தீட்டியுள்ள "பண்டைக் கிரேக்கம்" எனும் நூலில் கிரேக்கத்திலே இருந்த ஓவியர்களிலே சிறப்பு வாய்ந்த இருவரான சுக்ஸிஸ், பாராசியஸ் என்கின்றவர்களிடையே ஒரு காலத்திலே பெரியதோர் போட்டியே ஏற்பட்டது எனக் குறிப்பிடப்படுகிறது. என்ன போட்டி? ஓவியம்வரைவதிலே யார் நிபுணன் என்கின்ற பெரியதொரு போட்டி! போட்டிக்காக ஒரு பெரிய மன்றமே அமைக்கப்பட்டது ஒருவன் ஒரு அழகான திராட்சைக் குலையை எழுதிக் காட்டி அதை மன்றத்திலே தொங்கவிட்டான். எழுதிய திராட்சைக் குலையைக் கண்டதும் பக்கத்திலே மரங்களிலே இருந்த பசுங்கிளிகளெல்லாம் ஓடிவந்து அந்தத் திராட்சைப்பழத்தைக் கொத்த ஆரம்பித்தன. அவைகளுக்கு அது ஓவியம் என்று தெரியவில்லை. அவ்வளவு இயற்கையாகவே எழுதியிருந்தான்! அதைக் கண்ட ஓவியன் சுக்ஸிஸ், பாராசியஸ் என்கின்ற மற்றவனைப் பார்த்து "பார்த்தாயா என்னுடைய மகத்துவத்தை? திராட்சைக்கும் ஓவியத்திற்கும்கூட வித்தியாசம் தெரியாத கிளிகள் பறந்து வந்து கொத்துகின்றன. இதை மிஞ்சுகின்ற உன்னுடைய ஓவியம் எங்கே?" —என்று இறுமாப்போடு கேட்டான்.

உடனே பாராசியஸ் அவனைக் கூப்பிட்டு "எங்கே என்று கேட்கிறாய்? அதோ இருக்கிறது என்னுடைய ஓவியம்! அந்தத் திரைச் சீலையை நீக்கி விட்டுப் பார்!" என்று சொன்னான். உடனே திராட்சைக் குலையைத் தீட்டிய ஓவியன் ஓடோடிச் சென்று, தூரத்தில் இருந்த திரைச் சீலையை நீக்கினான். ஆனால்நீக்கமுடியவில்லை. அந்தத் திரையே ஒரு ஓவியமாக இருந்தது.

✱ 9-ம் பக்கம் பார்க்க

விற்பனையாகிறது!

'முரசொலி'யில் தொடர்கதையாகப் படித்தீர்கள்-
இப்போது திரை ஓவியமாகப் புத்தகத்தில் படியுங்கள்!

: புதையல் :

திரைக் கதை வசனப் புத்தகம்

விலை 8 அணா : : கழிவு 40 சத வீதம்

[தேவையான பிரதிகளுக்கு கழிவு நீக்கி முன்பணம் அனுப்பவும். அல்லது வி. பி. யில் அனுப்ப வேண்டுமென்றாலும் தெரிவிக்கவும். முன்பணம் அனுப்புவோருக்கே முதல்சலுகை தரப்படும்.]

எம். கே. பதிப்பகம்,
த. பெ. 712, : : சென்னை—6.

டி. டி. கே. வீட்டில்...

✻ 2-ம் பக்கத் தொடர்ச்சி

பெயர்" திருத்தத்தை எதிர்த்து உளறினாராம்!... எனக்குப் பயமாக இருக்கிறது! நீங்களாவது பார்த்து நல்லது செய்யுங்கோ!

டி. டி. கே: ஆமாம்! என்னை கவிழ்க்க எல்லோரும் சதி செய்கிறார்கள்! நான்கூட அடுத்தத் தேர்தலுக்கு உன் அப்பா ஊரில் நிற்கலாமென உள்ளேன்! அந்தத் தி. மு. க. பாலசுப்ரமணியத்தை எதிர்த்து நின்று இனி என்னால் ஜெயிக்க முடியாது!

மனைவி: ஐயோ! 'அங்கே என் தம்பி நிற்பதாக இருக்கிறான்! ......நீங்கள் அங்கேதானே சும்மா நில்லுங்க! பார்த்து ஏழைகளுக்கு இனியாவது நல்லது செய்யுங்கோ! அடுத்தத் தேர்தலுக்கு ஒரு வருஷம் முன்பே மந்திரிப் பதவியை ராஜினாமா பண்ணிவிட்டு மக்களுக்கு ஏதாவது தொண்டு செய்யுங்க! என்ன, மறந்து விடாதீங்க!

டி. டி. கே: மறப்பேனா?...யார் சொல்லைத் தட்டினாலும் உன் சொல்லைத் தட்ட முடியுமா?

மனைவி: என் பேச்சைத் தட்டவே மாட்டீர்களே!

டி. டி. கே: நிச்சயம் தட்ட மாட்டேன்!

மனைவி: அப்படீன்னா, தயவு செய்து இந்தப் பத்திரிகை பேப்பர் வரியையும், மண்ணெண்ணை வரியையும் எடுத்துடுங்கோ! அது என் அப்பாவையும், தம்பியையும் ரொம்பப் பாதிக்கிறது...! ...என்ன?

டி. டி. கே: இப்பொழுது முடியாதே! முன்பே பட்ஜெட்டை நேரு முதலிய மந்திரிகளிடம் காட்டி விட்டேனே!...ஊம்...

மனைவி: காட்டியிருந்தால் என்ன? இப்பொழுது ரத்து செய்து விடுங்கோ! ரத்து செய்யலைன்னா அடுத்தத் தேர்தலுக்கு ஒரு பத்திரிகைக்கூட உங்களைப்பற்றி விளம்பரம் போடாது...ஆமாம்!...'விடுதலை' கூட போடாது!...

டி. டி. கே: சரி, பார்க்கலாம். உன் பேச்சைத் தட்ட முடியுமா? (கடிகாரத்தைப் பார்த்து விட்டு) சரி! நேரமாச்சு! நான் பட்ஜெட்டை சரி பார்க்க வேண்டும்! நீ போய் ஒரு கிளாஸ் 'ஸ்ட்ராங் டீ' போட்டுக் கொண்டு வா! சீனியைக் கொஞ்சம் அதிகமாகவே போட்டுக் கொண்டா!

மனைவி: ஆமா; ஆமா! அதைப் பாத்து கவனமாப் போடுங்க. வீட்டு பட்ஜெட் போடுறதில் உங்க மூளையைச் சிதறவிட வேண்டாம்! நான் அதையெல்லாம் சமர்த்தா கவனித்துக் கொள்கிறேன்!

டி. டி. கே: குறும்புக்காரி!... நீயிருக்க எனக்குப் பயமேன்?...ஹீ...ஹீ...

சிறிது நேரத்தில் அந்த வீடே சிரிப்பொலிகளால் நிரம்பியது! அதே நேரத்தில் என் கனவு கலைந்தது. ஏன்? காங்கிரசுத் தோழர் ஒருவர் முன்னால் நின்று கொண்டிருந்தார். அவர், "என்னய்யா? பத்திரிகையை முகத்தில் மூடிக் கொண்டே பகற்கனவு காண்கிறாய்? கவலையாக இருக்கிறாப் போலிருக்கிறதே! என்ன குடி முழுகிப் போச்சு?" என்று கேட்டார்.

"நீங்கெல்லாம் இருக்கும் பொழுது குடி முழுகாமல் வாழவாப் போகிறது? நீ கூட அந்த டி. டி. கே. க்கு ஓட்டு போட்டு அங்கே அனுப்பினாயே; இப்பொழுது அவர் உன் தலையிலேகூட கையை வைத்து விட்டார்! வோட்டுப் போட்டதற்குக் கைம்மாறாக ஏராளமான வரி போட்டிருக்கிறார்! இதைப் படித்து விட்டாவது திருந்து!" என்று கூறி அவன் முகத்தில் பத்திரிகையை வீசி வீட்டிற்குள் சென்றேன்! ஃ

—ஆரூர் ஆனந்தன் பி. எஸ்ஸி.,

ஆந்திரரும், கேரளரும், கன்னடரும் திராவிடக் கூட்டாட்சியின் காரணத்தை அறிய—திராவிட முன்னேற்ற கழகத்தின் உயிரோட்டம் உலகறிய

'ஹோம் லண்ட்'

(ஆங்கில வார இதழ்)

ஆசிரியர் : அண்ணா

9-6-57 முதல் ஞாயிறுதோறும் வார ஏடாக வெளிவருகிறது.

டபுள் கிரவுன் 1-4 அளவில் 8 பக்கங்கள்; கிளேஸ் காகிதம்.

தனி இதழ் 2 அணா-ஆண்டு சந்தா ரூ 7

விவரங்கட்கு :

நிர்வாகி, 'ஹோம்லண்ட்'

95, திருக்கச்சி நம்பித் தெரு : : காஞ்சிபுரம்.

அந்த மருந்து...

✻ 5-ம் பக்கத் தொடர்ச்சி

பொட்டு, காலுக்குத் தண்டை கையுக்குக் கணையாழி போட்டு அழகுக்கு அழகு சேர்த்துப் பார்க்கத் துடிக்காத பெண் நெஞ்சம்தான்—தமிழ்த் தாய் தான் உண்டோ?

பெண் குலத்திலகங்களைக் காணும்போதெல்லாம் தானும் அவ்வாறு ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டாள் கமல். ஆனால் அவள் ஆசை மறு ஈராண்டுகளுக்கும் கிட்டவில்லை. பாஸ்கரனும் தன் இரத்தத்தில் உருவாகி வரும் உயிரினை எதிர்பார்த்து ஏங்கி நின்றான்.

அவர்கள் கண்முன் "குறள் தந்தக் கோமானையும் வெல்லும் குரல் படைத்த குழவிகள் மூன்று—வில், புலி, கயல் போன்று—மா, பலா, வாழை போன்று, இயல், இசை, கூத்து போன்று—பெற்று பெருவாழ்வு எய்துவீராக" என்று நண்பர்கள் வாசித்தளித்த திருமண வாழ்த்து மடல் தென்பட்டது!

"தேக்கு மரம் கடைந்து செய்ததொரு தொட்டிலிலே, ஈக்கள் நுழையாமல் இட்ட திரை நடுவில், பொன் முகத்திலே இழைத்த புத்தம் புது நீலச் சின்ன மணிக்கண்ணை, இமைக் கதவால் மூடிவைப்பாய்" என்ற புரட்சிக் கவிஞரின் தேன் சொட்டும் வரிகள் காட்சிதந்தன!

"கண்ணின் கருமணியே! கலி தீர்த்தப் பெட்டகமே! கொட்டி வைத்த முத்தே! நவரத்தினமே! கொத்து மருக் கொழுந்தே! கொத்தாத மாம்பழமே! கண்வளராய், கற்கண்டுச் சொல்லழகே!" என்று குழந்தையைத் தாலாட்டுவது போன்ற பாட்டொலி கேட்டது!

வேதனையைச் சகிக்க முடியாத பாஸ்கரன், விளக்கம் காண மனைவியுடன் மருத்துவரை நாடினான். பரிசோதனைக்குப் பிறகு அவர் தந்த செய்தி, தம்பதிகளின் வயிற்றிலே எரிமலையாக வெடித்தது! குமுறும் கடலாக ஓங்காரக் கூச்சலிட்டது! ஆயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டியது போல், உலகத்து அரவங்கள் அத்தனையும் தங்கள் விஷப்பையை அவர்கள் இரத்தத்தில் காலி செய்ததுபோல் துடித்தனர்; துவண்டனர்; தேம்பித் தேம்பி அழுதனர்! காவிரிப்புனலோ, குற்றாலத்து அருவியோவென கண்ணீர் வடித்தனர். இப்பொழுது கண்களைக்குளமாக்கி என்ன பயன்? அப்பொழுதே அறிவுக் கண்களை அகலமாக்கியிருக்கவேண்டும்!

ஆமாம்...வெல்லம் இனிக்குமென்றும், வேம்பு கசக்குமென்றும் சொல்லிப் பழகாமல் சுவைத்துப் பழகிவிடும் பிள்ளைக் கனியமுது—பேசும் பொற்சித்திரம் இனிமேல்அவர்களுக்குப் பிறக்கவே பிறக்காது!

அன்று கருவை அழிக்க உதவிய அந்த மருந்து கமலாவைக் காலத்திற்கும் மலடியாக்கி விட்டது! ஃ

'முரசொலி' சந்தா விபரம்:

உள்நாடு
ஆண்டு சந்தா ரூ. 6—50
ஆறு மாதம் ரூ. 4—0
வெளிநாடு
ஆண்டு சந்தா ரூ. 7—50
ஆறு மாதம் ரூ. 4—50

பிறைவானம்...

✻ 11-ம் பக்கத் தொடர்ச்சி

பையுடன் வெளியே தலையை நீட்டினாள், நல்லப்பொன்னு! ஆனால் திடீரென்று வெறி பிடித்த வேங்கை போலப் பாய்ந்தான் அந்த முரடன். பையை மட்டும் வேகமாகப் பிடுங்கிக் கொண்டு ஓடத் தொடங்கினான்.

"ஐயோ! நான்...நான்...!" என்று கத்திக் கொண்டே அவன் கையைப் பிடித்தாள் நல்லப்பொன்னு!

"நீ எங்கேயாவது தொலை... சனியனே!..." என்று அவளைக் கீழே தள்ளிவிட்டு தலை தெறிக்க ஓடிவிட்டான் அந்தப் பாவி!

ரொம்ப தூரம் ஓடிவந்த பிறகு களைப்பு மேலிட்டதால் மட்டுமல்ல; பையுக்குள் இருக்கும் பணக் கத்தையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலால் ஒரு தெரு விளக்கடியில் நின்றான். பையைத் திறந்தான். மறுகணம் ..என்ன ஆச்சரியம்! அவன் முகம் மிக மிக விகாரமாக மாறியது! காரணம்; பையுக்குள்ளே இருந்தது பணமல்ல; கல் — மண் —குப்பை— கூளம்—கடைசியாக ஒரு துண்டுக் கடிதம்!

" ஏ, சோம்பேறி!

பை கிடைத்து விட்டதா? ஆனால் உள்ளே உன் உள்ளத்தைப் போலத்தான் இருக்கிறதாக்கும்!...நன்றாய்ப் புரிந்து கொள்...உழைத்துப் பிழைக்க வேண்டும் ... ஊர் மெச்ச வாழ வேண்டும்'.... பாவம்; இந்த வயோதிக் தாய்; உடல் தளர்ந்தும் உழைக்கவேண்டும் என்ற உயர் எண்ணம் தளராத முதுக்கிழவி — உன்னைப் போன்ற ஈன புத்திக்காரர்களுக்கு—இன்னல் தரும் இழிகுணத்தாருக்கு ஒரு நல்ல பாடமாக இல்லையா? பார்த்துக்கொள்; இந்த அணையா விளக்கின் அற்புத ஒளிக் கற்றைகள் உனக்கு நல்ல பாதைகாட்டட்டும்! ஆனால் உனக்கு ஒரே ஒரு வணக்கம்! ஏன் தெரியுமா? எனக்கு வழி காட்டினாய்! நான் இனிப் பிழைத்துக் கொள்வேன். எனக்குப் பாட்டி துணை; நான் பாட்டிக்குத் துணை!...இனி இந்தப் பக்கம் திரும்பாதே! ஓடிப்போ!

—இப்படிக்கு,

நீ நினைத்தாற்போல கெட்ட பெண் இல்லா நல்லப்பொன்னு"

✻

முரடனின் முகத்தில் கோபமும்—பின்னால் ஏமாற்றமும்—அதற்குப் பின்னால் வெட்கமும் தோன்ற சிலையாக நின்றான்.

—சொர்ணம்.

கணை காட்டும் கலை அழகு!

❋ 7-ம் பக்கத் தொடர்ச்சி

அத்தகைய ஓவியர்களது பரம்பரை—கிரேக்கத்திலிருந்து வளர்ந்த அந்த பரம்பரை உலகத்திலே நாலா பகுதிகளிலேயும் பரவியது. தமிழகத்திலும் அத்தகைய ஓவியர்கள் இருந்தார்கள். இன்றைக்கும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஓவியர்கள் இயற்கைக்குமுரண்படாத ஓவியங்களைத் தீட்டினார்களா என்றால், ஒரு சிலர் தீட்டினார்கள்; மிகப் பலர் இயற்கைக்கு முரண்பாடான ஓவியங்களைத்தான் கலை வடிவத்திலே மக்களுக்குத் தந்தார்கள்.

ஒரு பெண் கையிலே ஒரு தாமரை மலரை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள் என்று ஓவியம் தீட்டினால், அதிலே இயற்கை இருக்கிறது. அதைப் பார்த்த ஒரு கவிஞனுக்கு அதிலிருந்து ஒரு கவிதையும் தோன்றும். கையிலே வைத்திருக்கிறாளே தாமரை மலர், அந்த மலருக்கும் அவள் முகத்துக்கும் கொஞ்சம்கூட வித்தியாசம் தெரியவில்லை பார்த்தாயா? எந்த அளவுக்கு அந்த ஓவியன் அந்தச் சித்திரத்தைத் தீட்டியிருக்கிறான் பார்த்தாயா? என்று அந்தக் கவிஞன் அங்கே ஒரு கவிதை எழுதிவிடுவான் — அது, இயற்கைக்கு முரண்படாத கலை! ஆனால் நமது தமிழ் நாட்டு ஓவியர்கள் மனிதனுக்குத் தேவையான கலையை இயற்கைக்கு முரண்பட்ட அளவிலே பிறகு எழுதத் தொடங்கினார்கள். கையிலே தாமரை மலரை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிற பெண்ணை அந்தத் தாமரை மலரிலேயே நிற்க வைத்து, தண்ணீரில் மிதக்க விட்டார்கள். அப்படி நிறுத்தப்பட்ட பெண்ணுக்கு இரண்டு கைகளல்ல; நான்கு கைகள் என்றும் சொன்னார்கள். அந்தப் பெண்ணுக்கு 'இலக்குமி' என்றும் பெயரிட்டார்கள். இதுதான் இயற்கைக்கு முரண்பட்ட கலை; இயற்கையோடு இணையாத கலை—என்று அறிவியக்கத்தார் கூறுகிறார்கள். நானும் கூறுகிறேன், எங்கும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்கிற அத்தகைய நெஞ்சுறுதி படைத்துவிட்ட காரணத்தால்!

இராமாயணத்திலே ஒரு அம்பு; அதைப் போலவே சங்க இலக்கியத்திலே ஒரு அம்பு! இந்த இரண்டு அம்புகளும், நம்முடைய நாட்டிலே தேவைப்படுகிற கலையை எவ்வளவு அழகாகச் சொல்லுகின்றன என்று பாருங்கள். சங்க இலக்கியத்திலிருந்து கிடைக்கின்ற அந்த அம்பு ஒரு வீரனுடைய அம்புறாத்தூளியிலிருந்துபுறப்பட்டு, ஒரு புலியினுடைய வயிற்றைக் கிழித்து, அதாவது ஒரு விலாப் புறத்திலே நுழைந்து, இன்னொரு விலாப்புறத்தின் வழியே வெளிப்பட்டு, பக்கத்திலே இருக்கிற வாழை மரத்திலே தொத்திக் கொள்ளுகிறது. இது சங்க இலக்கியத்து அம்பு! நீங்கள் கேட்கலாம், 'புலியினுடைய ஒரு விலாவினைக் கிழித்து இன்னொரு விலாவின் வழியாக வெளிப்பட்ட அம்பு எப்படியப்பா வாழை மரத்திலே தொத்திக் கொள்ளும்' என்று. அங்கேதான் கவிதை நயமும், கலை அழகும் ஒன்றையொன்று பின்னிக் கொண்டு கிடக்கின்றன. புலியினுடைய விலாவிலே நுழைந்துவிட்ட காரணத்தால் அம்பினுடைய வேகம் குறைந்து, வாழைமரத்திலே தொத்திக் கொள்ளுகிறது. அம்பினுடைய வேகம் எப்படிக் குறைந்தது என்பதை அதை வாழை மரத்திலே தொத்த வைத்து அந்தக் கவிஞன் அழகாகக் காட்டியிருக்கிறான்; கலையை சமைத்திருக்கிறான்!

அதே நேரத்தில் இராமாயணத்திலும் ஒரு அம்பு புறப்படுகிறது. இராமனுடைய அம்புறாத்தூளியிலிருந்து புறப்பட்ட அம்பு எதிரே இருக்கிற இராவணனுடைய சேனைகளையெல்லாம் அழித்து விட்டு, பிறகு அங்கிருந்து புறப்பட்டு இராவணனுடைய பத்து தலைகளையும் அறுத்து எறிந்து விட்டு, இராவணன் சீதையைப் பற்றி எங்கேயாவது நினைத்திருக்கிறானா—என்பதற்காக அவனுடைய இரத்தத்திலே நீந்தி, எலும்புகளிலே- நரம்புகளில் எல்லாம் நுழைந்து சென்று, சீதையினுடைய நினைவுகளை அழித்துவிட்டு, பிறகு தன் மேலே இருக்கிற இரத்தத்தைக் கழுவிக் கொள்ளுவதற்காக வங்காளக் குடாக்கடலிலோ, இந்து மகா சமுத்திரத்திலோ சென்று குளித்துவிட்டு, மறுபடியும் இராமனுடைய அம்புறாத்தூளிக்கே வந்து உட்காருகிறது; அல்லது படுக்கிறது; அல்லது தூங்குகிறது! அது இராமாயணத்திலே வருகிற ஒரு அம்பு! அங்கே கலை இயற்கைக்கு முரண்பட்ட கலையாகி விடுகிறது. சங்க இலக்கியத்தில் மிகைப்படுத்திக் கூறப்பட்டாலும் இயற்கையோடு இணைந்த கலையாக இயற்கைக்கு முரண்படாத கலையாக இருக்கிறது. 'கலையும் மனிதனும்' என்று நினைக்கிற நேரத்தில், மனிதனுக்குத் தேவையான கலை இயற்கைக்கு முரண்படாத கலையாக இருக்க வேண்டும்; இயற்கையோடு இணைந்த கலையாக இருக்க வேண்டும்—என்று நாம் சொல்லுகிறோம். கலையிலே இத்தகைய நிகழ்ச்சிகள் மாத்திரமல்ல; ஓவியம் மாத்திரமல்ல; சிற்பம் மாத்திரமல்ல; நான் குறிப்பிட்டேனே அம்புகளைப்பற்றி—அதைப்போன்ற இலக்கியச் சுவைகள் ஏராளம்: ஏராளம்!

திருவள்ளுவர் தன்னுடைய திருக்குறளை இவ்வளவு எழிலோடு எழுதியிருக்கிறார் என்றால், அதிலே இருக்கிற அறத்துப் பால், பொருட் பால், இன்பப்பால்—இந்த முப்பாலையும் படித்துணர்ந்தோர் அவர் எவ்வளவு கலைச் சுவையோடு, எவ்வளவு கலையழகு சொட்டச் சொட்ட குறளை யாத்திருக்கிறார் என்பதைஅறிவுள்ளோர்—கலாரசிகர்கள்—அத்தனை பேரும் நல்லமுறையிலே உணர முடியும். இங்கே பாடிக் காட்டப்பட்ட குறட்பாக்களும், நடனமாடிக் காட்டப்பட்ட குறட்பாக்களும் எவ்வளவு கலையழகோடு பொருத்தப்பட்டவைகள் என்பதை நீங்கள் உணர முடியும்.

★

எங்களுக்குக் கலையுலகத்திலே தொடர்பு இருக்கிறது; இல்லை; நாங்களும் கலையுலகத்திலே இருக்கிறோம். தொடர்பு இருக்கிறது என்று சொன்னால் கூட அது வேறு; இது வேறு என்றாகிவிடும். மனிதனுடைய வாழ்க்கையிலே அத்தனையும் கலைதான். குழந்தையின் மழலை மொழி கலையாக்கப்படுகின்றது வள்ளுவரால், யாழைவிட—குழலைவிட இனியது என்று சொல்லப்படுகிறது. குழந்தையின் மழலைக் குரலிலிருந்து—சாகிறபோது கேட்கிற மரணக் குரல் வரையிலே கலையம்சம் நிரம்பியதாகத்தான் இருக்கிறது. ஆகவே மனிதனுடைய வாழ்க்கையில் கலை இல்லாதது எதுவுமில்லை. மனிதன் —கலை காட்டுமிராண்டித்தனம்.

★

சிலர் கேட்கிறார்கள், 'கலை கலைக்காக இருக்க வேண்டுமா? கலை வாழ்வுக்காக இருக்க வேண்டுமா?' என்று. இந்தப் பாசறையைப் பொறுத்தவரை கலை கலைக்காகவே இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் அல்ல; கலை வாழ்க்கைக்காக இருக்க வேண்டும் என்று கருதுகிறவர்கள்தான் நிறைந்திருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாகவே "கலையும் மனிதனும்" என்று தலைப்பு தந்திருக்கிறார்கள்.

இன்னுமொரு குரல் எங்கிருந்தோ கிளம்பும், 'கலையைப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தலாமா?' என்று. 'பிரச்சாரம்' என்பதற்கு அவர்கள் என்ன பொருள் கொள்ளுகிறார்கள் என்பதை நாம் அந்த நேரங்களில் உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.

•

ஒருவனிடத்திலே சென்று "நீ கள் குடிக்காதே!" என்று சொல்லுவதுகூட பிரச்சாரம்தான். இங்கு நடிக்கப்பட்ட நாடகத்திலே 'கள் குடிக்கக் கூடாது' என்று எடுத்துச் சொன்னார்கள்; அதுவும்கூட பிரச்சாரம்தான். அந்தப் பிரச்சாரத்தைப் பரப்ப இங்கு கலை பயன்படுத்தப்பட்டது. ஆகவே கலையை எப்படி பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தாது இருக்க முடியும்? மத மார்க்கங்களைப் பரப்ப இராமாயணம் போன்ற—மகாபாரதம் போன்ற இதிகாச நூல்களும் அவைகளைஎடுத்துக்காட்ட நாடகமேடைகளும் இருந்தன. கந்த புராணம் சைவத்தையும், இராமாயண நாடகங்கள் வைஷ்ணவத்தையும் பரப்ப உண்டாக்கிய பிரச்சார சாதனங்கள்தான். அதைப் போலவே ஒரு எழுத்தாளன்—ஒரு அறிவியக்கவாதி தன் கருத்துக்களை சொல்ல எப்படித் தன் பேனாவை எடுக்கிறானோ அந்தப் பேனாமுனை எழுப்புகின்ற குரல் நாட்டு மக்களுக்கான அறிவுரையாக இருக்குமேயானால். பிரச்சாரம் என்று சொல்லுகின்ற வார்த்தையால் அவைகளை மூடிவிடக் கூடாது. கலையிலே பிரச்சாரம் தேவை.

அதே நேரத்திலே எதுவும் அளவுக்கு மீறக்கூடாது என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அதை உணராதவர்கள் அல்ல; எந்த இடத்திலே, எப்படி எப்படி, எந்தெந்தக் கருத்துக்களை எந்தெந்தப் பாணியிலே 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் கேளாரும் கேட்ப' எங்களுடைய வார்த்தைகளைச் சொல்ல வேண்டும் என்பதையும் நாங்கள் உணர்ந்திருக்கிறோம். "இவர்கள் பேச்சாளர்கள்; இந்தப் பேச்சுக் கலையால் என்ன சாதித்துவிட முடியும்?" —கேட்டார்கள் தேர்தல் நேரத்திலே! இப்போதும் கேட்பார்கள். ஆனால் அந்தப் பேச்சுக் கலையைப் பற்றி வள்ளுவர் சொல்லுகிறார், இங்கே பாடிக் காட்டினார்கள்:

"வில்லேருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை"

—வில் பிடித்திருக்கும் வீரனுடைய பகையைக் கொண்டாலும் கொள்ளலாம்; சொல்லால் அடிக்கின்ற அந்த உழவன் இருக்கிறானே — பேச்சாளன்— பேச்சுக் கலையிலே வல்லவன்— அவனுடைய பகையை யாரும் கொள்ளாதீர்கள் என்று அறிவுரையை வள்ளுவர் சொல்லியிருக்கிறார். நாங்கள் சொல்லேருழவர்கள் என்பதற்காக எதை வேண்டுமானாலும் சொல்லிவிடலாமா — என்றால் அதற்கும் வள்ளுவர் கூறுகிறார்,

'இனிய உளவாக இன்னாத கூறல்'
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று

—மேடையிலே பேசுகிறவர்கள் எல்லாம் பேச்சாளர்கள்-

கனியிருப்பக் காய் கவர்தல்! வளைந்த முதுகில் வரிச் சுமை!

அல்ல; அதிலே காய் பறிப்பவர்களும் இருக்கிறார்கள்; கனி பறிப்பவர்களும் இருக்கிறார்கள்; மேடையிலிருந்து மற்றவர்களை வசைமாறிபொழிகிறவர்களும், இவர்கள் இன்ன ஜாதியினர்; இவர்கள் இன்னாருக்குப் பிறந்தவர்கள்; இவர்கள் இப்படிப்பட்டவர்கள்; இவர்கள் அதைச் செய்தார்கள்; இதைச் செய்தார்கள்—என்று தனிப்பட்ட முறையிலே தாக்குபவர்களும் பேச்சாளர்கள் என்று தான் சொல்லப்படுகிறார்கள் நாட்டிலே. அதே நேரத்தில் 'இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' என்ற குறளை உணர்ந்த பேச்சாளர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். கனியை விட்டு விட்டுக் காயைப்பறிக்கிற பேச்சாளர்கள் பல மேடைகளிலே ஏறுகிறார்கள். அந்தப் பரிதாபமான—அபாக்யமான—துர்பாக்கியமான நிலைமையை இந்த நாட்டுப் பொது மக்கள் பலப் பல நேரங்களிலே அனுபவிக்கவே வேண்டியிருக்கிறது.

கனி பொழிகின்றபேச்சாளர்கள் தமிழகமெங்கிலும் இருக்கிறார்கள்; அவர்களுக்கு வழிகாட்டியா 'காஞ்சி'யில் இருக்கிறார்கள். அத்தகைய பேச்சாளர்கள்—அந்தக் கனி மூலம் கருத்துத் தருகின்றபேச்சாளர்கள்...பேச்சைத் தங்களுடைய கலையாக வைத்துக்கொண்டு அந்தக் கலை மூலம் நாட்டுக்குத் தேவையான கருத்துக்களை சொல்லுவதும், 'கலையும் மனிதனும்' என்ற பொருளுக்குக் கீழ் நிச்சயமாக அடங்கும் என்கின்ற காரணத்தால் அதை நான் சொல்லத் துணிகிறேன். இந்த அளவிலே கலை மனிதனுக்கு நாகரீகப் பாதையிலே செம்மையோடு நடக்க மிக மிக தேவைப்படுகிற ஒன்று என்பதை உங்களிடத்திலே கூறிக்கொண்டு, "அந்தக் கலைவாழ்க! அந்தக் கலை கருத்தோடு வளர்க!! அந்தக் கலை செழித்து ஓங்குக!!!"—என்று கூறி.

சமூகப்பணிபுரிகின்ற சகோதரிகள் கலைப்பணியையும் தங்களுடைய பணிகளில்லே ஒன்றாக கருதி, தேனிலே மருந்து கலந்திடுதல் போல் கலைப்பணியோடு நல்ல நல்லகருத்துக்களைக் குழைத்துத் தருவார்களேயானால், நாட்டுக்கு நல்லதோர் சேவை புரிந்தவர்கள் ஆவார்கள்.

சேவை புரிவதிலே தேர்ந்தவர்கள்பெண்கள். ஆகவேதான் இந்தப் பணிபுரியும் பாவையர் முகாம் மிக மிக நாட்டுக்கு அவசியமாகின்ற ஒரு முகாம்.

ஒரு காலத்திலே பெண்கள் தான் நாட்டினுடைய கண்களாக இருந்தார்கள். ஒருகாலத்திலே ஔவை போன்ற கவிஞர்களும் அவரைப் போன்ற பலப் பல தமிழ்ப் பெண்மணிகளும் கவிதா மண்டலத்தைத் திருகிறவர்களாக இருந்தார்கள். கையினில் வாளெடுத்துப் போர்புரியவும், சூளுரைத்து நாடு காக்கவும் தங்களுடைய நாட்டுக்குத் தேவையான நல்ல காரியங்களிலே ஈடுபடுகிறவர்களாகவும் பெண்கள் இருந்தார்கள் என்பதை எடுத்துரைக்கின்ற புறநானூறு செய்யுள்கள் நம்மிடத்திலேதான் இருக்கின்றன. அந்தப் பெண்களுடைய புகழை உயர்த்துகிறது அகமும், புறமும், கலிங்கத்துப் பரணியும், சங்க இலக்கியங்களும், சிலப்பதிகாரமும்! இத்தகைய அருமையான பைந்தமிழ்ப் பனுவல்களை எல்லாம் பெற்றிருக்கிற தமிழகம், பெண்களால் உயர வேண்டும். நாட்டினுடைய கண்களாகிய பெண்கள் தமிழகத்தினுடைய ஒளிவிளக்குகளாகத் திகழ்ந்து, தங்களுடைய சந்ததியை இந்த நாட்டினுடைய விடுதலைச் சந்ததியாக—இந்த நாட்டு மன்னர்களாக ஆக்குவதிலே முனைய வேண்டும்.

'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்று கூறுவார்கள்; தொட்டிற் பழக்கத்திலேயே நல்ல வீரர்களை உற்பத்தி செய்கின்ற அந்தப் பண்பை வருங் காலத்திலே தர வேண்டிய பெண்கள் அதற்கான நல்ல கருத்துத் தெளிவை இப்போதே பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அந்தப் 'பெண் சமுதாயம் வாழ்க! அவர்கள் பணிபுரியும் இந்தப் பாசறை வாழ்க!! இந்தப் பாசறைக்கு ஆக்கமளிக்கிற பெரியவர்கள் அனைவரும் வாழ்க, வாழ்க! என வாழ்த்துகிறேன்.

★★★

❋ முதல் பக்கத் தொடர்ச்சி

உலக அரங்கத்திலே தனக்கும், தனது அரசாங்கத்திற்கும் ஏற்பட்டுள்ளதாக அவர் நினைத்துக்கொண்டிருக்கும் செல்வாக்கிற்கு களங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற ஆசையின் காரணமாக இந்த அநியாயமான—கொடுமையான—ஏழைகளின் வயிற்றிலடிக்கும் வரியை ஏற்றுக் கொள்ள வேண்டுமாம். "இதோ—இரண்டு ஐந்தாண்டு திட்டத்தை எட்டிலே தீட்டிவிட்டோம். இனி நாட்டிலே எல்லோரின் இல்லத்திலும் இன்பம்—இன்பம்' என பறைசாற்றி விட்டதால்—அந்த வீராப்பை நிலை நிறுத்தப் பாட்டாளிகள், 'பாரத புத்திரர்கள் விதித்துள்ள வரிகளை ஏற்றுக் கொள்ளவேண்டுமாம்! எப்படி இருக்கிறது பண்டிதரின் வாதம்!

"பசுவே! பசுவே! புல்லும், கொள்ளும்உனக்கு போஷாக்கு தரப் போதாது—நீ வலிவும், பொலிவும் பெற வேண்டுமானால் உன் கால்களை வெட்டித் தருகிறேன் உணவாக; அதை உண்டால் உரம்பெறும்" என்பதைப்போல. "இச்சைக்கினிய பச்சைக்கிளியே! உன் மேனி இன்னும் பளபளக்க—கொய்யாவும்—கோவையையும் கொத்தினால் போதாது—உன் ரத்தத்தை நீ கொத்தி உறிஞ்ச வேண்டும்— அப்போதுதான் உன் உடல் பச்சை பட்டாடைப் போல் ஜொலிக்கும்—இதோ ஊசிக்கொண்டு குத்துகிறேன்—உன் ரத்தத்தை நீயே உறிஞ்சு!" என்பதைப்போல 'பாரத புத்திரர்களே—நீங்கள் வயிறார உண்ண வேண்டுமா, உங்கள் கரங்களை வெட்டி காணிக்கையாக தாருங்கள். நாங்கள் அதை உங்களுக்கு உணவாக சமைத்துத் தருகிறோம்' என்று கூறுகிறார் நேரு; கோல்கொண்ட செருக்கால்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபுற இந்த வரிப்பளுவை சுமக்கத்தான் வேண்டும் என்ற பண்டிதரின் மொழிக்கு நாம் வேறு என்ன உதாரணம் காட்ட முடியும்.

ஐந்தாண்டு திட்டம்—அது சரிவர நாட்டு மக்களுக்கு பயன்படுமா என்பதில் பெரும்பான்மையோருக்கு சந்தேகம்-இந்த அளவில் உள்ள திட்டத்தை நிறைவேற்ற—பாட்டாளியின் வயிற்றிலா அடிக்க வேண்டும்? ஆளும் வர்க்கத்தாரின் ஆடம்பரச் செலவையும்—அரசாங்கத்தில் ஏற்படுகின்ற பண விரயத்தையும் ஆளவந்தார்களால் செய்யப்படுகின்ற ஊழல்களையும் தடுத்துத் தேக்கினாலே போதுமே இத் திட்டத்தை நிறைவேற்ற!

"அரசாங்கத்தில் ஏற்படுகின்ற பண விரயத்தை தடுக்கும் முயற்சி வெற்றிபெறவில்லை" என்று பண்டிதரே ஒப்புக்கொண்டிருக்கிறார். அரசாங்கத்தில் ஏற்படுகின்ற பண விரயத்தை தடுக்க முடியாதவர்கள் இந்த திட்டத்தை நல்ல முறையிலே நிறைவேற்றுவார்கள் என்பதில் எப்படி மக்களுக்கு உறுதி ஏற்பட முடியும்?

சாதாரணத் தலைவலிக்கு தக்க மருந்துக் கொடுக்க முடியாத வைத்தியரால் 'விஷ ஜுரத்'திற்கு எப்படி சிகிச்சை செய்ய முடியும்? முதலில் தலைவலியை குணப்படுத்த கற்றுக்கொண்டல்லவா, விஷ ஜுரத்திற்கு சிகிச்சை செய்ய முற்பட வேண்டும்?

"இந்த விரயத்தைத்தடுக்காவிடில் மக்கள் மீது வரிகளை உயர்த்துவது நியாயமாக இருக்காது" என்று நேரு பண்டிதரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

"ஆபாசமான ஓவியம்தான்—மக்கள் கண்ணில் படக்கூடாதுதான்— ஆனாலும் பாருங்கள்" என்பதைப்போல பண விரயத்தைத் தடுக்காமல் வரி விதிக்கக் கூடாததுதான்; ஆனாலும் விதித்துள்ள வரியை கொடுங்கள்'; என்கிறார் பண்டிதர்!

ஏழைகளின் வளைந்த முதுகிலே வரிச்சுமையை ஏற்றி வைத்துவிட்டு, தாங்களும் ஏறிச் சவாரி செய்த எந்த அரசாங்கமும் எந்தக் காலத்திலும் அதிக நாட்கள் நீடித்ததில்லை என்ற சரித்திர உண்மையை, ஊராள்வோர் உணரும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

மக்களை ஏமாற்றும் மகோன்மத்தர்கள்!

"இப்பொழுது அமுலுக்கு வருவதற்காக இந்திய நிதி நிதி அமைச்சரால் விதிக்கப்பட்ட வரிகள் 111! இந்த 111 வரிகள் மூலம் அவர் எதிர்பார்க்கக்கூடியது ரூ 93 கோடி! இந்த 93 கோடி ரூபாயும் எதற்காக என்றால், இரண்டாவது ஐந்தாண்டுத திட்டத்தை நிறைவேற்றுவதற்காக!

தேர்தலுக்கு முன்னால், நாங்கள் ஆட்சி பீடத்திற்கு வந்தால் இத்தனை வரிகளையும் போடுவோம் என்று கூறவில்லை! உள்ளத்தில் கொண்டிருந்தார்களா என்றால், கொண்டிருந்தார்கள்! இவ்வளவு வரிகள் போட்டால்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இந்த ஆண்டு நிறைவேறும் என்ற கொள்கை உண்மையை-அதற்கான திட்டங்களை—அடிப்படைகளை சனவரித் திங்களில் தீட்டிக் கொண்டுதானிருந்தார்கள்!

ஆனால் தேர்தல் நேரத்தில் என்ன சொன்னார்கள் என்றால், 'ஐந்தாண்டு திட்டத்தை காங்கிரசாட்சி-இந்தியத் துணைக் கண்ட ஆட்சி நிறைவேற்றிவிடும்; மக்கள்மீது வரிபோட வேண்டி வந்தாலும், ஏழை-எளிய-பாட்டாளி-நடுத்தர மக்களின்மீது இந்த காருண்ய மிகுந்த காங்கிரஸ் வரி போடாது! தாங்கக்கூடியவர்கள் மீதுதான் போட்டாலும் போடுமே தவிர, ஏழை-எளிய பாட்டாளி மக்களை வாட்டக்கூடிய முறையில் வரிகளைப் போடாது' என்ற முறையில் கூறினார்கள்.

இப்படியாக அவர்கள் சொல்லி மூன்று மாதம் ஆவதற்குள்ளாகவே 112 வரிகளை, போட்டுத்தான் தீருவேன்; வேறு வழியில்லை என்றும், 'யார் தடுத்தாலும்—தடுக்காவிட்டாலும் போடுவேன்; யார் எதிர்த்தாலும்—எதிர்க்காவிட்டாலும் போடுவேன்; யார் கண்டித்தாலும்—கண்டிக்காவிட்டாலும் போடுவேன்,' என்று ஆணவ மொழி பேசுகிறார் 'இந்திய' ஆட்சியாளரின் நிதியமைச்சர்.

—நாவலர். இ. ரா. நெடுஞ்செழியன்.

உலர்ந்த மிளகாயைக்கூட "கரப்பான் பூச்சி' என்று நினைத்து — "ஐயோ, ஐயோ!" என்று குரல் ஒலிக்க — குலை நடுங்க—அலறி ஓடும் பட்டிணத்துப் பள்ளிக்கூடப் 'பாப்பா'க்களை நாம் கண்டிருக்கிறோம். அப்படிப்பட்டவர்கள் பேய் — பூதம் — பிசாசு—காட்டேரி-என்றெல்லாம் சொல்லுகிறார்களே; பயமுறுத்துகிறார்களே; அந்தக் கற்பனைப் பெயர்களைக் கேட்டவுடன் என்ன பாடு படுவார்கள்!

ஆனால் நான் இப்போது உங்களுக்கு அறிமுகப்படுத்தப் போகும் சிறுமி அத்தகைய 'பயந்தாங்கொள்ளி'களுக்கு முற்றிலும் மாறுபட்டவள்.

அதோ பாருங்கள்; எதற்கும் அஞ்சாதவள்போல் நடந்து செல்லுகிறாளே, அவளைக் கரப்பான் பூச்சியல்ல; காட்டு மிருகம்கூட ஒன்றும் செய்துவிட முடியாது! பேய் வாழும் காடு-மக்கள் அண்ட அஞ்சும் பூமி-என்றெல்லாம் சொல்லப்படுகின்ற சோலை வழியே அவள் நடந்து செல்லுகின்றாள், தனியாக-துணிந்து.

மனோதத்துவப்படி இப்படி பயமற்றுத் திரிய வேண்டுமென்றால், ஒன்று பைத்தியம் கொண்டவளாக இருக்க வேண்டும்; அல்லது சூழ்நிலையை மறந்தவளாக-இருக்க வேண்டும்! இந்தப் பெண் சூழ்நிலையை மறந்தவளாக - தன் எதிரில் என்னென்ன இருக்கின்றன—எவை எவை நடைபெறுகின்றன என்ற நினைவே அற்றவளாகத்தான் சென்று கொண்டிருந்தாள்.

அவள் கண்ணெதிரே ஒரு சூன்யவெளிதான் தென்படுகிறது; மறுகணமே அது சூதுக் குகையாகவும் மாறுகிறது. இரக்கமற்ற மனிதர்களை அவள் அங்கே காணுகிறாள். பெற்றவர்களை இழந்த அவள்-தவறு; 'விழுங்கி ஏப்பமிட்டுவிட்ட, அவள் அவர்களின் கண்களுக்கு 'சனிய'னாக-'துக்கிரி'யாகத் தோன்றுகிறாள். எப்படி இருந்தென்ன; முடிவு பசிதான்; பட்டினிதான்; பரதேசிக் கோலம்தான்; யாராவது ஆதரவு காட்ட மாட்டார்களா என்ற கணமும் மாறாத ஏக்கச் சிந்தனைதான்!

அவள் நடந்து கொண்டே இருந்தாள். "ஏ பெண்ணே!" என்று யாரோ அழைப்பது கேட்டு நின்றாள்.

கண்களிலே அன்பு நெளிந்தோட அவளருகே நின்று கொண்டிருந்தான் ஒருவன். "என்னம்மா; சாப்ட்டியா?" என்றும் கேட்டான்.

இப்படி ஒரு கேள்வியை இதுவரை யாருமே அந்தப் பெண்ணைக் கேட்டதில்லை. அவளது பஞ்சடைந்த விழிகள் அகலத் திறந்தள.

"இல்லையே..." என்ற பாவனையில் உதட்டைப் பிதுக்கினாள்; குரலெடுத்துச் சொல்ல அப்போது தெம்பில்லை.

"ஐயையோ, பாவம்! உட்காரும்மா; சாப்பிடலாம்..." என்று தன்னிடமிருந்த சாப்பாட்டு மூட்டையை அவிழ்த்தான் அவன்.

"உன் பெயர் என்னம்மா...?" என்று பரிவுடன் கேட்ட அந்த மனிதனுக்கு "என் பெயர் நல்லப்பொன்னு" என்று பதில் சொல்லிக் கொண்டே சாப்பிட ஆரம்பித்து விட்டாள் அவள்.

பல நாள் பட்டினி-பாழும் களைப்பு-இவை உந்தித் தள்ள கல்லலே; எங்கே ஒளிய வைக்கிறான்னே தெரியலியே!"

—அவன் சொல்லியபடியே இருந்தான். நல்லப்பொன்னுவின் முகத்தோற்றம் ஏதோ யோசிப்பதைப்போலத் தோன்றியது.

"என்னம்மா யோசிக்கிறே?..."

"ஒண்ணுமில்லே! நீங்க சொல்றதெல்லாம் ரொம்ப சரி; அதை எப்படி எடுக்கறது? அதான் யோசிக்கிறேன்..."

"அதுக்கு நல்ல வழி நான் தர்றேன் நல்லப்பொன்னு! நீ அங்கே போயி, 'பசி, பசி'ன்னு கத்து; அழுவு! கிழவிக்கு இளகின மனசு! காலணாவாவது தருவா; அதுவும் அந்தப் பையிலேருந்துதான் எடுப்பா? அதை

★ பாடம் ★

கண நேரத்தில் சாப்பாட்டு மூட்டையைக் காலியாக்கி விட்டாள், நல்லப் பொன்னு!

"ஐயோ, பாவம்! இப்படிப் பசியும் பட்டினியுமா எத்தனை நாளைக்கும்மா நீ கஷ்டப் படுவே?..."

"கிடைச்சா சாப்பிடுறது; இல்லே சாகிறது..."-வேதாந்தி போல—உலகையே வெறுத்து விட்டவளைப் போலப் பதில் சொன்னாள் நல்லப் பொன்னு!

"ஐயையோ! அப்படியெல்லாம் சொல்லக்கூடாதும்மா! நான் சொல்றபடி நடந்தா நீ இனிமே கஷ்டப்படவே வேண்டாம்மா!..."

—என்ன சொல்லப் போகிறான் என்று கேட்க ஆவலாய் துடித்து நின்றது அந்த குழந்தை நெஞ்சு!

"இதோ பாரு. நல்லப் பொன்னு! தூரத்திலே ஒரு குடிசை இருக்கு...அந்தக் குடிசையிலே ஒரு கிழவி இருக்கா... அந்தக் கிழவிக்கிட்டே ஒரு பை இருக்கு..."

"அந்தப் பையிலே என்ன இருக்கு?..."

"சொல்றேன் நல்லபொன்னு. பணமிருக்கு! நிறைய பணமிருக்கு! இருபது வருஷமா அந்தக் கிழவி சுள்ளி வித்து சம்பாதிக்கிற பணமெல்லாம் அதிலேதான் இருக்கு..."

'உம்...அப்படியா?..."

'ஆமாம் நல்லப் பொன்னு.நீ ரொம்ப ரொம்ப நல்ல நல்லப் பொன்னு இல்லே; நீ அந்தப் பையைக் கிழவி எங்கே வைக்கிறான்னு கவனிச்சு 'நைசா' எடுத்துக்கிட்டு வந்து என் கிட்ட தந்துடு! செய்வியா? நானும் ரொம்ப நாளா முயற்சிக்கிறேன். ஒண்ணும் நடக்

நீ கவனிச்சுக்க! அப்புறமா' 'ராத்திரிக்குமட்டும் இங்கயே படுத்துக்கறேன் பாட்டி'ன்னு சொல்லு; சரிம்ப்பா! தீர்ந்துது கதை! கிழவி தூங்கினவுடனே பையை எடுத்துக்க. நான் இருட்டின பிறகு அந்தப் பக்கம் வர்றேன். பையை கொடு; ரெண்டுபேரும் போயிடுவோம்...என்ன?..."

—யோசனை சொல்லித் தந்து விட்டு நல்லப்பொன்னுவின் முகத்தைப் பார்த்தான், அந்த வஞ்சக நெஞ்சு படைத்த வக்கிர புத்திக்காரன்.

நல்லப் பொன்னுவின் முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் தென்பட்டன. "சபாஷ், அப்படியே செய்துடறேன். நான் போகட்டுமா, முன்னால்?..." என்று கேட்டாள்.

"ம்...போ...ஆனால் நான் சொன்னது எதையும் மறந்துடாதே!...நான் நல்லா இருட்டினவுடனே அங்கே வந்துடறேன்!..." என்றான், அந்த அன்போடு ஆலகால விஷத்தைக் கலந்து பேசிய முரடன்.

நல்லப்பொன்னு நடக்க ஆரம்பித்தாள். அத்தீயவன் காட்டிய கொடிய பாதையில் நடக்க அந்தப் பிஞ்சுக் கால்கள் எப்படித்தான் துணிந்தனவோ என்று யோசிக்கிறீர்களா? என்ன செய்வது?

★

நன்றாக இருட்டிவிட்டது.

அவன் ஆமைபோல் ஊர்ந்து —பூனைபோல் நடந்து குடிசையின் வாசலில் வந்துப் பதுங்கிக் கொண்டாள். 'நல்லப் பொன்னு!" என்று மெதுவாக அழைத்தான்.

மறுகணமே, காத்திருந்தவள் போல கையில் அந்தச் சிறிய

✻ 8-ம் பக்கம் பார்க்க

அந்தோ, அவசரமே!



"ட்ரிங்... ட்ரிங்..."

"ஹலோ! ... குட் மார்னிங் விமலா!... நான்தான் பூமா பேசறேன்...தெரியுதா? ஆமா, டெலிபோன் அடிச்சவுடனே எடுத்துட்டியே, பக்கத்திலேதான் இருக்கியா?"

"...உம்..."

"உனக்கு ஒரு முக்கிய சமாசாரம் தெரியுமா? கைத்தறி 'எக்ஸிபிஷன்'லே வனிதா புதிசா ஒரு 'சோலி' எடுத்திருக்கா; பாத்தியா? அதுபோல நான்கூட ஒன்னு எடுத்துட்டேன்; நீயும் அதுமாதிரி வாங்கிட்டேன்னா 'யூனியாமா' இருக்குமேன்னு..."

"...ம்..."

"எங்கப்பாகூட மாட்டேன்னு தான் சொன்னாரு முதல்லே... கடைசியிலே வழக்கமான பாணமில்லே... கண்ணீர்...அதுதான் பலன் தந்தது!... ஆனா...... உங்க அம்மா பெரிய 'பூத'மாச்சே! நீ பாம்பைக் கண்டதுமாதிரி நடுங்குவியே! புதுத்துணின்னா உன் முதுகுத் தோலை உறிச்சிடுவாங்களே; என்னடி செய்யப்போறே?...;"

"...ம்..."

"என்ன செய்யப்போறே? நான் வழி சொல்லட்டுமா? ஸ்கூல் திறக்கறப்போ — ஏழாவது 'கிளாஸ்' போறப்போ—என். சி. சி. யிலே சேர்ந்திருக்கிற சிறுமிகள் எல்லாம்—ஒரே மாதிரி 'டிரஸ்' போடணுமின்னு 'டீச்சர்' சொன்னதா புளுகேன்! வேணுமின்னா நானும் சாட்சிக்கு வர்றேன்... 'ஆமா; ஆமா'ன்னு தலையாட்டுறேன்! உங்க அம்மா கண்ணிலே மிளகாய்ப் பொடி தூவிடலாம்... என்ன சொல்றே?...

"...உம்..."

"சொல்லேண்டி விமலா; சும்மா 'உம்' முன்னே இருக்கியே! உங்கம்மாதான் பத்ரகாளியாச்சே! வேற வழியே இல்லே..."

"ஓகோ"

"அப்ப நான் சொல்றபடி செய்துடறியா?"

"..........."

"விமலா..."

"..........."

"ஹலோ!... ஹலோ!... என்ன பதிலே இல்லே!"

"..........."

"ஹலோ! அது 18416 தானே?...

"ஆமாம்!......"

"விமலா வீடுதானே?"

"ஆமாம்!..."

"பேசுகிறது விமலாதானே!..."

"இல்லே; நான் விமலாவின் அம்மா!

"ஐயையோ!"

★

(டெலிபோன் திடீரென்று கீழே வைக்கப்பட்டுவிட்டது.)

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

வரிப் பிரியை—கோவை.

(?) சினிமாவுக்கு செலவழிக்கிற பணத்தை வரிகொடுத்தால் என்ன?

அந்த ஆரணங்கின் கன்னத்திலே மட்டும் இவ்வளவு முத்தம் கொடுக்கிருயே; எனக்கு இரண்டு கொடுத்தால் என்ன என்று அலி கேட்பது போலிருக்கிறது; இந்தக் கேள்வி!

சண்முக வேலாயுதம்; மார்த்தாண்டபுரம்

(?) டி. டி. கே.யை எதற்கு உதாரணமாகச் சொல்லலாம்?

சென்ற இதழ் 'முரசொலி'யின் முதற் பக்கத்தைப் பார்க்கவில்லையா, நீர்?

கே. அருண்கிரி; வேதாரண்யம்.

(?) பெரியாரின் அடுத்தப் போராட்டம் என்ன?

மத்திய அரசாங்கம் விதிக்கும் வரிகளை எல்லாம் தவருமல் செலுத்த வேண்டும்—என்று ஒவ்வொரு வீட்டு வாசலிலும் மறியல் செய்தாலும் செய்யலாம்!

வடிவேலன்; விருதுநகர்.

(?) மத்திய அரசாங்கம் விதித்திருக்கும் வரிகளால் பாதிக்கப்படப் போகிறவர்கள் பணக்காரர்கள்தான்—என்று காமராசர் பேசியிருக்கிருரே; அது பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

"எல்லோரும் இந்நாட்டு மன்னர்"களல்லவா?

மு. க. உடல் நிலை

ஆசிரியர் மு. கருணாநிதி அவர்கள் 'இன்புளுயன்சா' விஷ சுரத்தினுல் பீடிக்கப்பட்டிருக்கிற காரணத்தாலும், மருத்துவர்கள் பூரண ஓய்வு தேவை என்று வற்புறுத்துகிற காரணத்தாலும், அண்மையில் ஒப்புதல் தந்துள்ள கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாமைக்கு மிகவும் வருந்துகிறுர்கள்.

? ? ?

'முரசொலி' நாடக மன்றம் அளிக்கும்

தேன் கூடு

? ? ?

1-6-57 "வெள்ளி வீதி"யில்

மு. கருணாநிதி எழுதும்

"என்னைப்பற்றி ..."யுடன்,

"விமர்சனத்திற்கு விமர்சனம்"

"விசித்திரப் பிறவிகள்"

"பராக்! பராக்!

"தாரமா? தாரகையா?"

"லின் — லிஸ்"

இன்னும் பல இடம் பெறுகின்றன.

[மே மாத பட்டியல் தொகை அனுப்பியுவர்களுக்கு மட்டுமே 1—6—57 இதழ் அனுப்பப்படும். விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் விற்பனையாளர்கள் தேவை.]

வெள்ளி வீதி, 12.-பி., ராமானுஜம் செட்டித் தெரு, சென்னை 6.

ஜூன் முதல் வாரம் கிடைக்கும்!

சத்தான கருத்துகள்—

வித்தகர் பேருரைகள் நிறைந்த இலக்கியப் பேரிதழ் சிறந்த அமைப்புடனும், புதிய மெருகுடனும் வெளிவருகிறது!

'முத்தாரம்'

புலவர் குழந்தை

கே. ஏ. மதியழகன்

பி. சி. கணேசன்

ஆகியோர்

எழுத்தோவியங்கள் தருகின்றனர்!

'முத்தாரம்'

★ **பண்டிதர் வாழ்வில் பாவையர் பந்து:** 'ஆண்கள் மத்தியில் இவர் பேரழகன்'—என்று பெண்களால் பெருமையோடு பேசிக் கொள்ளப்படுகின்ற பிரதமர் நேருவின் வாழ்க்கையில் குறுக்கிட்ட பாவையரைப் பற்றி சுவையான தகவல்களை இந்தக் கட்டுரை தருகிறது.

★★ **முந்தோ முத்து!**-யவனத்திற்கும், கிரேக்கத்திற்கும், எகிப்துக்கும் அன்று நாம் கூடை கூடையாக அனுப்பி வைத்தோமே; அந்தக் கட்டாணி முத்துக்களைப் பற்றிய சுவையான கட்டுரை இது.

'முத்தாரம்'

★ **பெண்களுக்கு இதயமில்லை**-சென்ற இதழில் வெளிவந்த 'ஆண்களுக்கு இதயமில்லை' என்ற வங்கக் கதைக்கு பதில் சொல்லுகிறது இந்த ஆங்கிலக் கதை—தமிழில் **முல்லை சத்தி** எழுதுகிறுர்.

★★ **நன்னிலம்**—நோபல் பரிசு பெற்ற ஆங்கில இலக்கியத்தின் மகத்தான பெருங் கதையைத் தமிழில் தருகிறுர், **அ. ராஜா.**

'முத்தாரம்'

ஓவியர் கே. மாதவன் தரும் முகப்பு

இதழுக்கே தனிச் சிறப்பு!

ஆசிரியர் மு. க. வின் கவிதை நடைச் சிறுகதை உண்டு!

இன்றே விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்குச் சொல்லிவையுங்கள்!

விற்பனையாளர்கள் தேவையான முன் பணம் அனுப்பி வைக்காவிடில் அதிகப் பிரதிகள் அனுப்பப்படமாட்டாது!

... கருணாநிதி. 'முரசொலி' அச்சகம். 4-128, மவுண்ட்ரோடு. சென்னை-6. தமிழ்நா